
Tamil Information Centre
11 Beulah Road Thornton Heath
SURREY CR4 8JH (U. K.)
TEL:- 01 653 0506

# லண்டன் முரசு

Vol 6 LONDON MURASU 28th AUGUST 1975 No 5



எழில்மிகு பாரிசின் எய்ஃபல் கோபுரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VARIETY SILK HOUSE

**Direct Importers, Wholesalers & Retailers,**

**152 Ealing Road**
**Wembley, Middx.**

**01-903 6302**



WELL KNOWN SAREE SHOP OF NAIROBI
IS NOW OPEN IN **WEMBLEY!**

PRINTED SAREES FROM £4-00
PLAIN SAREES FROM £2-90
10% DISCOUNT ON FOLLOWING SAREES:
- BENARSI PURE CHIFFON
- PLAIN PRINTED & EMBROIDERED SAREES
- BENARSI SAREES
- PURE CHIFFON (PLAIN, PRINTED & EMBROIDERED SAREES)
- PURE CHINON " " "
- MANY OTHER OPENING OFFERS.


**V S H** MEANS - THE LATEST FASHION
THE GREATEST CHOICE - THE BEST SELECTION

TUBE STATIONS : ALPERTON & WEMBLEY CENTRAL
BUSES : 79, 83, 297

# SPICEWAY Ltd.

## Cash & Carry

ORIENTAL & CONTINENTAL GROCERS
258 Battersea Park Road,
LONDON S.W. 11



"மொத்த விற்பனை விலையில் உங்கள் வீட்டிற்குத்
தேவையான சகல மளிகைப் பொருட்களையும்
நாம் விற்பனை செய்கின்றோம்"

அரிசி, பருப்பு, ஊறுகாய், எண்ணெய், சட்னி,
தேங்காய்த்துருவல், மற்றும் சகல பலசரக்குப்
பொருட்களும் இங்கு கிடைக்கும்.

உரிமையாளர்: திரு. ஈ. தாமோதரம்

தொலைபேசி : 01 - 228 3923 ; 228 4347

FREE DELIVERY IN SOUTH WEST LONDON AREA FOR MINIMUM ORDER OF £10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் முரசு

தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை
-பாரதிதாசன்.


ஆசிரியர்.

சு.ம.சதானந்தன் B.Sc.(Econ)(Lond.)

சிறப்பாசிரியர்கள்

கி.ஞானசூரியன் M.Sc. (Lond.), ARIC.

அரங்க முருகையன்

ஓவியர்கள்.

கோ.ஜம்பு, பக்கீர் M.Sc.(Lond.)

கௌரவ உதவியாளர்

அ.கோகுலன். எம்.டி.விஜயேந்திரன்

நிருபர்கள்.

தமிழ்நாடு டி.செல்வராஜன்(சென்னை), ஆ.ஞானசேகரன் M.Sc(மதுரை)
கேரளம் எஸ்.எஸ்.மணி B.com. பிரான்சு செய்யது மௌலானா
மைசூர் ஆர்.கண்ணன் B.A., B.O.L. மலேசியா பொ.பாலகோபால் B.A., B.L.
மொறிஷியஸ் எம்.தங்கமுத்து கனடா கே.வெங்கட்ராமன்
அயர்லாந்து டாக்.ஸ்ரீ.வேங்கடேசன் B.Sc., A.I.C. மான்செஸ்டர் ஆர்.எல்.சிவம் B.Sc.



முரசு 6 ஆவணி தி.ஆ 2006 ஆகஸ்டு 28, 1975 ஒலி 5







| | | | |
|---|---|---|---|
| ஆசிரியவுரை | 2 | உமாவுக்காக | 19 |
| தாய்நாடுகளின் செய்திகள் | 3 | அன்புள்ள ஆசிரியருக்கு | 23 |
| சிதறிய செய்திகள் | 5 | நூல்நிறை | 24 |
| சிறப்புநாட்குறிப்பு | 5 | போராட்டங்கள் | 24 |
| திருக்குறள் | 7 | தமிழ்இலக்கியம் | 26 |
| மேற்குநாடுகளின் செய்திகள் | 9 | FINAL EXAMS | 28 |
| முன்னேறும் அறிவியலில் | 12 | NEWSGRAM | 30 |
| தமிழ்த் தொண்டர்கள் | 13 | NEWS IN BRIEF | 31 |
| நிழற்படங்களில் செய்திகள் | 16 | CLASSIFIED ADS | 32 |




பக்கீர்


மேற்கு நாடுகளின் முதன்முதல் தமிழ்த் திங்கள் ஏடு. இலாப நோக்கின்றி நடத்தப்படும் பிரசுரம். லண்டன் முரசு பிரசுரத்தால் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னொரு வியட்னாம்?

இந்தியா காப்பாற்றப்பட்டு விட்டது! ஆம், இந்திய மக்கள் காப்பாற்றப்பட்டு விட்டார்கள்! இந்த நிலையை இந்திய மக்கள் உணர்ந்திருக்க மாட்டார்கள் தான் — ஆனால் இந்தியாவில் இன்னொரு வியட்னாம் ஏற்பட்டிருந்தால் இந்தியாவின் கதி என்னவாகி இருக்கும்? அத்தகைய நிலை ஏற்படுவதை நினைத்துப் பார்க்கக்கூடியவர்கள் தான், ஏற்படவிருந்த ஆபத்தின் தீரத்தையும் உணர்ந்திருக்கமுடியும்.

மேற்கு நாடுகளின் பத்திரிகைகளில் இனமும், "இந்தியாவில் சர்வாதிகாரம் தலை விரித்தாடுகின்றது", என்றும், 54,000அரசியல்வாதிகள் சிறையில் தள்ளப்பட்டுள்ளனர் என்றும், "இந்திராவின் கன்னத்தில் மகன் அறைந்தார்" என்றும், தாறுமாறான ஆதாரமற்ற செய்திகளுக்கு முதலிடம் அளித்து வரும் இவ்வேளையில், இந்தியா எவ்வித அபாயகண்டத்தைத் தாண்டியுள்ளது என நமக்குக் கிடைக்கும் தகவல்களை சேர்த்துப் பார்க்கும் போதுதான் உணர முடிகின்றது.

வெளி நாட்டு சக்திகளும், உளவு நிறுவனங்களும் பங்கேற்றிருக்கும் உண்மைகள் இப்போது வெளியாகிக் கொண்டிருக்கின்றன. எனினும், எந்த வெளிநாட்டு சக்திகளோ, எந்த உளவு நிறுவனங்களோ இந்தியாவை அழிவுப் பாதைக்கு செலுத்த இயங்கின என்ற விபரங்கள் பற்றி விவாதிப்பதில் நாம் சக்தியை விரயக்குவதை விட, இனியும் இப்படி அபத்து நேராது பார்த்துக்கொள்ளக்கூடிய நிலையில் இந்திய மக்களுக்கு அரசியல் ஞானமும், வெளியுறவு ஞானமும் ஏற்பட வழியுண்டா என ஆராய்வது தான் முக்கியமானதொன்றாகின்றது.

தீவிர பொதுவுடமைக் கொள்கையாகட்டும், அல்லது தீவிர இந்துசமயக் கொள்கையாகட்டும், அல்லது தீவிர திராவிட தேசிய உணர்ச்சியாகட்டும், அல்லது முதலாளித்துவக் கொள்கையாகட்டும், இவைகளைக் கொண்டு தனிப்பட்டவர்கள் இயங்குவதில் தவறில்லை. ஆனால் முரண்பாடான கொள்கைகளைக் கொண்டு இயங்கும் இயக்கங்களுக்கு பலத்தினை அளித்து, ஊக்கத்தை அளித்து ஆயுதங்களையும் அளித்து, ஊடுருவல்காரர்களால் ஆட்டப்பட்டும் வைத்தால் பின்னால் ஏற்படும் விளைவுகள் பற்றி அந்தந்த இயக்கங்களில் ஊறிப்போனவர்கள் ஒருபோதும் உணரமாட்டார்கள். இதே நிலைக்குத்தான் ஜெயப்பிரகாசர் போன்றோர் தள்ளப்பட்டிருந்தனர்.... அல்லது இராணுவத்தையும் போலீசையும் அரசுக்கெதிராக புரட்சி செய்யும்படி பொறுப்பற்றவாறு பொது மேடைகளில் அறை கூவியிருக்கமாட்டார் ஜெயப் பிரகாசர்.

தீவிரக் கொள்கைகளுக்காகவும், இனச் சுதந்திரத்திற்காகவும், வேறும் சீர்திருத்தங்களுக்காகவும் தனது தேசத்தை சீர்குலைக்காமல் இருக்க சிறப்பாக வெளிநாட்டு சக்திகளுக்கு நாட்டைப் பலியாக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டிய அரசியல் ஞானத்தை ஒவ்வொரு இந்தியனும் பெற்றே ஆகவேண்டும். அன்றி உண்மையான — நிரந்தரமான சுதந்திரத்தை இந்தியா பெற்றதாகக் கருதமுடியாது!

# தாய் நாடுகளின் செய்திகள்

## யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா கொல்லப்பட்டார்!
## தமிழர் கூட்டணி இளைஞர்கள் மீது போலிசார் வேட்டை !!

யாழ்ப்பாண மாநகரத்தின் மேயரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்ப்பாணக்கிளையின் தலைவருமான திரு. அல்பிரட் துரையப்பா சுட்டுக்கொல்லப் பட்டார்! ஜூலை 27 ஞாயிறன்று வட்டுக்கோட்டை வட்டத்தில் உள்ள புன்னாலை கோவிலுக்கு அவர் செல்கையில் முகமூடி அணிந்த மூவர் திடீரென்று வந்து அவரை சுட்டுக்கொன்றனர். திரு. துரையப்பாவுடன் கூடச்சென்ற நகரசபை உறுப்பினர் திரு.இராஜரத்தினமும், திரு.லோகநாதனும் சிறிது காயத்துடன் தப்பினார்கள். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் பலத்த பொலீஸ் காவலுக்குள் ஆகியுள்ளது. தமிழர் கூட்டணி அமைப்பாளர் கவிஞர் காசி ஆனந்தன், தமிழ் இளைஞர் பேரவை அமைப்புச்செயலாளர் மாவை சேனாதிராசா, வண்ணை ஆனந்தன் , மணியம், முத்துக்குமாரசுவாமி, புஸ்பராசா,ஆகிய தமிழ் இளைஞர் தலைவர்கள் போலீஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.யாழ்ப்பாண மாநகரசபையும் கலைக்கப்பட்டுள்ளது.

ஜூலை 27ந்தேதி பிற்பகல் 12.30மணியளவில் மேயர் திரு. துரையப்பாவும், அவருடன் கூட திரு. இராஜரத்தினமும், திரு.லோகநாதனும், கார்சாரதி சிவமும் புன்னாலையில் உள்ள கோவிலுக்குச் சென்றனர். வாரந்தோறும் திரு.துரையப்பா இங்கு வழிபட வருவதுண்டாம். திரு.லோகநாதனும்,திரு. துரையப்பாவும் கோவிலை நோக்கிச்செல்கையில் அருகில் உள்ள மடத்திலிருந்து முகமூடியணிந்த மூவர் விரைந்து வந்து மேயர் துரையப்பாவைச் சுட்டுக் கொன்றனராம். பின்னர் மேயரின் காரை பலவந்தமாக எடுத்துக்கொண்டு அவர்கள் மறைந்துவிட்டனர். மேயரின் வண்டி பின்னர் சேந்தான் குளத்தருகே கவனிப்பாரற்றுக் காணப்பட்டதாம். சேந்தான் குளம் கீரிமலைக்கருகேயுள்ள ஒரு கடற்கரைக்கிராமம்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மேயர் துரையப்பாவின் இறுதிச்சடங்கிற்கு பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா, மற்றும் அமைச்சர்கள் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, குமாரசூரியர்,இரத்நாயக்கா, டி.பி.இலங்கரத்ன, ஆர்.எஸ்.பெரேரா, குலதிலகா,பதியுதீன் மகமது, கல்லுகல்ல ஆகியோரும் தனி விமானத்தில் வந்து கலந்துகொண்டனர் வடபோர்ணியோவின் புருனெய் நாட்டில் டாக்டராகப் பணிபுரியும் திருமதி.துரையப்பா இறுதிச்சடங்கில் கலந்துகொள்ள தனியாக விமானப்படை விமானம் ஒன்றை பிரதமர் சிறிமாவோ ஏற்பாடு செய்திருந்தார். திரு.துரையப்பாவின் சடலத்தைத் தாங்கிச்சென்ற ஊர்தியில் யாழ்ப்பாண மக்களுக்கு எனது கடைசி பிரியாவிடை என எழுதப்பட்டிருந்தது. யாழ்ப்பாண மாநகரில் அரசாங்க அலுவலகங்களும், கல்லூரிகளும் மூடப்பட்டிருந்தன. யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் ஆயிரக்கணக்கான ஆயுதம் தாங்கிய பொலீஸ் இராணுவப்படையினர் காவல் புரிந்தனர்.

48வயது நிரம்பிய அல்பிரட் துரையப்பா 1952ல் அரசியல் வாழ்க்கையில் நுழைந்தார். 1958ம் ஆண்டு அவர் யாழ்ப்பாண மாநகரின் மேயரானார். 1960ல் அவர் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு.ஜி.ஜி.பொன்னம்பலத்தைத் தேர்தலில் தோற்கடித்து யாழ்ப்பாணத்தின் எம்.பி ஆனார். 1965, 1970 தேர்தல்களில் அவர் தோல்வியுற்றார். சிங்களக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முதல் கிளையொன்றைத் தமிழ் மாநிலத்தில் ஏற்படுத்தி அதன் தலைவராகவும் இயங்கினார். யாழ்ப்பாணத்தில் 1974ம் ஆண்டு நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு போலீஸ் காட்டுமிராண்டித்தன தாக்குதலை முன்னின்று நடத்தினார் என அவர் மீது யாழ்ப்பாண மக்கள் குற்றம் சாட்டி வந்தனர்.யாழ்ப்பாண மாநகருக்கு பல சேவைகளை அவர் மேயராகவிருந்த காலத்தே புரிந்தாலும் சுதந்திரத் தமிழ் ஈழத்தின் எதிரியாகவும், சிங்கள அரசின் ஐந்தாம் படைத்தலைவராகவும் அவர் கருதப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.



## சென்னையில் 'தொலைக்காட்சி' (டெலிவிஷன்) ஆரம்பம்!

இம்மாதம் 15ந்தேதி முதல் சென்னை மாநகரில் "தொலைக்காட்சி" சேவை ஆரம்பமாகியுள்ளது. இதனை முன்னிட்டு தொலைக்காட்சிப் பெட்டிகள் விற்பனையும் மிகவும் சுறுசுறுப்பாக நடைபெறுகின்றது. 19 அங்குலத் திரைகொண்ட தொலைக்காட்சிப் பெட்டியொன்று , சராசரி ரூ 4,000க்கு விற்பனை ஆகின்றது. டைனவிஷன் நிறுவனத்தினர் இங்கு விற்பனையாகும் தொலைக்காட்சிப் பெட்டிகளை சென்னை அடையாற்றில் உள்ள தொழிற்சாலையில் தயாரித்து வருகின்றனர்.

## "இந்தியா காப்பாற்றப்பட்டு விட்டது"

"இந்தியாவில் இன்னொரு வியட்நாம் திட்டமிடப்பட்டிருந்ததை திருமதி இந்திராகாந்தி உணர்ந்து விட்டார். வியட்நாமின் மாய் லாய் படுகொலைகள், போலவும் அம்ரிட்கார் ஹிந்து முஸ்லீம் கலவரங்கள் போலவும் இந்தியாவில் ஆர்ப்பாட்டங்களும், கொலைகளும் ரத்தக்களறியும் ஏற்படுவதைப் பார்த்துக் கொண்டு அவர் எப்படி வாளாதிருக்க முடியும்?" என லண்டன் டெய்லி மெயில் பத்திரிகையின் முன்னாள் துணை இலக்கிய ஆசிரியரும், நூலாசிரியருமான திரு . ஜார்ஜ் பிலென்சோன் "இந்தியா வீக்லி" பத்திரிகைக்கு [illegible] தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ப் பண்பாட்டுப் பெருவிழா
## ஏற்பாடுகள் தீவிரம்!

உலகெங்கும் வாழும் தமிழ்மக்களின் பிரதிநிதிகள் பங்குகொள்ளும் பண்பாட்டுப் பெருவிழா ஒன்று சென்னையிலும் தமிழகத்தின் சில பெரு நகரங்களிலும் நடைபெற இருப்பது தெரிந்ததே. 1975 டிசம்பர் 24ல் தொடங்கி 1976ஜனவரி 15ம் தேதி வரை இந்த விழாவை நடத்திடத் திட்டமிட்டு வரும் உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் விழா ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் தலைவரும் தில்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியருமான டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் இதுபற்றித் தெரிவிப்பதாவது:

சிறிய அளவில் திட்டமிடப்பட்ட பண்பாட்டுப் பெருவிழா இன்று உலகளாவிய பேரார்வத்தை எழுப்பியுள்ளது. சுமார் பதினைந்துக்கும் மேற்பட்ட உலக நாடுகளிலும் உலகின் கவனத்துக்கே வராத சின்னஞ்சிறு தீவுகளிலும் வாழுகின்ற தமிழர்கள் இந்த விழாவை மிகுந்த ஆவலோடு எதிர்நோக்கி மடல்கள் விடுத்த வண்ணம் இருக்கிறார்கள். ஒவ்வொரு நாட்டிலிருந்தும் இரண்டு பேர் முதல் 5பேர் வரையில் தான் பேராளர்களாக விழாவில் பங்கு கொள்ளலாம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த விதியைத் தளர்த்தி மேலும் பல தமிழர்கள் விழாவிலே பங்கு கொள்ள வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோள் பல நாடுகளிலிருந்து வந்து கொண்டிருக்கிறது. பலவேறு அரசியல் நெருக்கடிகளில் சிக்கியுள்ள சில வெளிநாட்டுத் தமிழர்கள் "நாங்களெல்லாம் இந்தப் பெருந்தமிழ் விழாவைக் கண்டுகளிக்க வாய்க்குமோ வாய்க்காதோ?" என்று ஏக்கக் குரலில் மடல்கள் வரைந்து வருகிறார்கள்.

இயக்கத் தலைவர் சாலை இளந்திரையன் அவர்களும் அவருடைய துணைவியார் டாக்டர் சாலினி அவர்களும் இது தொடர்பாகத் தமிழகத்துப் பெருமக்கள் பலரைச் சந்தித்தார்கள். தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, கல்வி —சுற்றுலா அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன், நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன், தொழிலாளர் நல அமைச்சரும் விழாவின் காப்பாளர்களிலே ஒருவருமான திரு.க.இராசாராம் ஆகியோர் இவர்களின் ஆர்வத்துக்கு ஊக்கமூட்டி அரசின் சார்பிலும் தனிப்பட்ட முறையிலும் இயன்ற உதவிகளை எல்லாம் செய்வதாக வாக்களித்திருக்கிறார்கள்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம், துணைவேந்தர் சுந்தரவடிவேலு, குன்றக்குடி அடிகளார், மொழிப் பேரறிஞர் தேவநேயப் பாவாணர், முஸ்லிம் லீக் (தமிழ்நாடு) தலைவர் ஆ.கா.அ. அப்துல் சமது, கவிஞர் கருணானந்தம் ஆகியோரையும் விழாக்குழுவின் சார்பில் சாலைத் தம்பதியர் சந்தித்துப் பேசினார்கள். இப்பெருமக்கள் அனைவருமே, விழாவின் சீரிய நோக்கத்தை வியந்து பாராட்டியதோடு தங்களின் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்துள்ளார்கள்.

வகுப்பு, கலந்துரையாடல், கருத்தரங்கம், சொற்பொழிவு முதலிய நிகழ்ச்சிகள் சென்னையில் பத்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும். அவைகளிலே தமிழகத்துப் பேரறிஞர் பலரும் பங்கு கொள்ளுவார்கள். தமிழகத்தின் சிறந்த நாவலர்கள் அறுபேர் சிறப்புச் சொற் பொழிவுகளை நிகழ்த்துவார்கள். ஒரு நாள் நிகழ்ச்சியில் வெளிநாட்டுப் பேராளர்கள் தங்கள் தங்கள் நாடுகளில் தமிழ்ப்பண்பாடும் கலையும் வளர்ந்து வரும் முறைகளை எடுத்து விளக்குவார்கள். தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்கள் நாடகாசிரியர்கள் கவிஞர்கள் முதலியோருடன் வெளிநாட்டுத் தமிழர்கள் அளவளாவி மகிழவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விழாவின் இரண்டாம் பகுதியாகத் தமிழகச் சுற்றுலா ஒன்று ஏற்பாடு செய்யப்படுகிறது. வெளிநாட்டுப் பேராளர்கள் இரண்டு அல்லது மூன்று பேருந்துகளில் சுமார் ஒரு வாரகாலத்தில் தமிழகம் முழுவதையும் சுற்றிப்பார்ப்பார்கள் இந்தச் சுற்றுலாவின் போது தஞ்சை, மதுரை, நெல்லை, கோவை சேலம் ஆகிய பகுதிகளில் பேராளர்களுக்கு வாழ்த்தும் வரவேற்பும் அளிக்கவும் அந்தந்த ஊர் பெரியவர்கள் திட்டமிட்டுள்ளார்கள். தஞ்சை மாவட்டத்தின் சார்பில் தஞ்சையில், விழாப் பொறுப்பை ஏற்றிருப்பவர் நூலக ஆணைக்குழுத் தலைவர் முத்துப்பேட்டை ந.தருமலிங்கம் அவர்கள். மதுரைமாநகரில் பு.மனோகரன் அவர்கள் விழாப் பொறுப்பு ஏற்க, கருமுத்து தி.மாணிக்கவாசகம் போன்ற பெருமக்கள் உற்றதுணை புரிவார்கள். நெல்லையில் பேராசிரியர் பா.வளன்அரசுவின் துணையோடு கலைக்கழகத்தினரும் வேறு பொது நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் விழாவை நடத்துவார்கள். கோவையில் விழா நடத்திச் சிறப்பிக்க, பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அவர்கள் இசைந்துள்ளார்கள். வடமேற்குத் தமிழகத்தின் சார்பில் விழாவைச் சேலத்திலே நடத்திடும் பொறுப்பை அமைச்சர் க.இராசாராம் அவர்கள் ஏற்றுள்ளார்கள்.

இந்த 5 ஊர்களிலும் வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், பாவைக்கூத்து, பொய்க்கால் குதிரை, கரக ஆட்டம் இலாவணி முதலான நமது பழங்கலைகளில் ஒவ்வொன்றை நடத்திக்காட்ட ஏற்பாடு நடைபெற்று வருகிறது. இயல், இசை நாடகம், நாட்டியம், தொழில், பொருளாதாரம் முதலான பலதுறைகளிலும் தமிழகத்திலே பலகாலமாக ஏற்பட்டு வந்துள்ள வளர்ச்சிகளையும் மாறுதல்களையும் படம் பிடித்துக் காட்டும் கண்காட்சி ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது. தமிழ் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை அழகுற விளக்கும் உலகெங்கும் வாழும் தமிழ்ப் பேரறிஞர்கள் வழங்கும் கருத்துக்கள் அடங்கிய விழாமலர் ஒன்றும் சிறப்பாகத் தயாராகி வருகிறது. ஆங்கிலத்திலும், தமிழிலும் அமைந்த கட்டுரைகளையும் ஆய்வுரைகளையும் கொண்ட இந்த மலர் தமிழ்ப்பண்பாட்டின் மணத்தை உலகெங்கும் பரப்பக்கூடிய நறுமலராக உருவாகி வருகிறது.

முதலாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்குக் களமும் வளமும் அமைத்துக் கொடுத்த பெருமைக்கு உரியவர்களான மலேசிய அரசினரை இந்த விழாவின் போது சிறப்பு விருந்தினராக அழைத்துப் பெருமைப்படுத்த வேண்டுமென்ற பேரார்வமும் விழாக்குழுவினருக்கு இருந்து வருகிறது. தமிழகத்துப் பலதுறைப் பெருமக்கள் காட்டிவரும் உற்சாகத்தையும், வெளிநாட்டில் பொங்கிப்பரவும் ஆர்வத்தையும் கவனிக்கையில் தமிழகமே சுமார் ஒருமாத காலம் புத்தம் புதிய பொலிவுக் கோலம் காட்டப் போகிறது என்று பூரிப்போடு தெரிவிக்கிறார் தலைவர் டாக்டர் சாலை இளந்திரையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தியாவை இன்னொரு வியட்நாமாக ஆக்கி உருக்குலைக்கும் நோக்கத்துடன் அமெரிக்காவும், நேட்டோ நாடுகளும் திட்டமிட்டு செயல்பட்டன" என இவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். "நியூஸ்வீக் பத்திரிகையில் பிரபல ஜாக் அண்டர்சன் தந்த தகவலின் படி பதட்டநிலையைப் பரவுதல் திட்டத்தில் இந்தியாவை அமெரிக்கா தேர்ந்தெடுத்திருந்தது பற்றி மிகவும் வருத்தத்துடன் வாசித்தேன் என்ற திரு. பிலென்கெயின் , திருமதி. இந்திராகாந்தியும் அவரது ஆலோசகர்களும் , துணி கரமான புத்திசாலித்தனமான நடவடிக்கைகளை எடுத்ததற்குப் பாராட்டப்பட வேண்டியவர்கள்" எனக் கூறியுள்ளார். தனது இந்திய நண்பர்களுக்கும் இந்திய மக்களுக்கும் பாராட்டுதல்களைத் தனது அறிக்கை போன்ற கடிதத்தில் விடுத்திருக்கும் திரு. பிலென்கெயின் , திருமதி. இந்திராகாந்தியை சந்தித்தும் உள்ளாராம். இந்திரா தானுகவே பதவியை எதிர் நோக்கி ஒரு போதும் இருக்கவில்லை. அவர் தேசபிதா நேருவின் புதல்வி என்பதையும், மகாத்மா காந்தியின் சிஷ்யை என்பதையும் மறந்து விடாதீர்கள். அவருக்கு உதவுங்கள் எனத் தன் கடிதத்தை முடித்துள்ளார் திரு. ஜார்ஜ் பிலென்கெயின்.

## சிதறிய செய்திகள்

*** இலங்கையின் முதல் மிதக்கும் படகை(HOVER CRAFT)கட்டுபெத்தை வளாகத்தைச் சேர்ந்த 4தமிழ் பொறியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

*** சென்னை ஆயிரம் விளக்கில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 'சாந்தம்' தியேட்டரை ஆந்திரப்பிரதேச முதல்வர் திரு. வெங்கல்ராவ் திறந்து வைத்தார். இதைச்சேர்த்து சென்னை மாநகரில் 69தியேட்டர்கள் உள்ளன.

*** சென்னையிலுள்ள ஸ்டுடியோக்களில் மீண்டும் படப்பிடிப்புக்கள் மும்முரமாக நடக்கின்றன. அமைச்சர் ராஜாராம் முயற்சி காரணமாக முடிக்கிடக்கும் ஸ்டுடியோக்களும் திறக்கப்பட இருக்கின்றன. அமைச்சர் ராஜாராம் அதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

*** ஈழத்தமிழர் கூட்டணி அமைப்பாளர் கவிஞர் காசி ஆனந்தனைக் கைது செய்து கொண்டு சென்ற பின்னர், அவரது வீட்டை பொலிசார் சோதனை செய்தனர். அங்கிருந்த சில பழைய துண்டுப் பிரசுரங்களையும், கவிஞரின் புத்தகங்களையும் தான் பொலிசாரால் கைப்பற்ற முடிந்ததாம்.

*** இலங்கையின் நிர்வாக சேவைக்கு ஆகஸ்டில் 15பேர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் 14பேர் சிங்களவர் ஒரேயொருவர் தமிழ் முஸ்லிம்.

*** சென்னையில் முதன் முறையாக செயற்கை மழை பெய்தது. மேகங்களில் வெள்ளி ஐயோடைட் இரசாயனத்தைப் பரப்புவதன் மூலம் தமிழ்நாடு அரசினர் சென்னையில் தொடர்ந்து 8நாட்களுக்கு மழைபெய்யச் செய்துள்ளனர்.

*** பங்களாதேஷ் நாட்டின் தேசபிதா காலஞ்சென்ற முஜிபூர் ரஹ்மான் மறைவிற்காக நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் பேசுகையில் பிரதமர் இந்திரா காந்தி முஜிபூர் ஒரு தேசியத்தலைவராக உலகெங்கும் கருதப்பட்டு வந்தார் என்றார்.

## சிறப்புநாட்குறிப்பு

| மாதம் | நாள் | சிறப்பு | விடுமுறை |
|---|---|---|---|
| செப்டம்பர் | 1 | தொழிலாளர் தினம் | அமெரிக்கா, கனடா |
| செப்டம்பர் | 4 | யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி தேர் | ———— |
| செப்டம்பர் | 11 | பாரதியார் நினைவுதினம் | ———— |
| செப்டம்பர் | 15 | பேரறிஞர் அண்ணாநினைவு தினம் | ———— |
| செப்டம்பர் | 26 | பூரணை விடுமுறை | இலங்கை |
| அக்டோபர் | 2 | காந்தி — சாஸ்திரி ஜயந்தி | இந்தியா |
| அக்டோபர் | 5 | நவராத்திரி ஆரம்பம் | ———— |
| அக்டோபர் | 13 | சரஸ்வதி பூஜை | ———— |
| அக்டோபர் | 14 | கொலம்பஸ் தினம் | அமெரிக்கா |
| | | விஜயதசமி | ———— |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*** பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கட்கு சாகித்ய அகாடமியின் சிறப்பு உறுப்பினர் விருது அளிக்கப்பட்டுள்ளது. சாகித்ய அகாடமியின் துணைத்தலைவர் பேராசிரியர் கே.ஆர். சீனிவாச அய்யங்கார் தலைமையில் நடைபெற்ற விழாவில் பலதுறை அறிஞர்களும் தெ.பொ.மீயின் அறிவு ஆற்றலைப் புகழ்ந்தார்கள். சாகித்ய அகாடமியின் 20வது சிறப்பு உறுப்பினராக தெ.பொ.மீ தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது

*** சென்னையின் பிரசித்தி பெற்ற "மூர்மார்க்கெட்" எதிரே ரூ 13.6லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள சுரங்கப்பாதையை முதல்வர் கருணாநிதி திறந்து வைத்தார். 15மாத காலத்தில் கட்டப்பட்ட இந்த சுரங்கப்பாதையை , சொற்பொழிவு ஏதுமின்றி இரண்டே நிமிடங்களில் திறந்து வைத்தார்.

*** மோகன் தாரியா, கிருஷ்ணகாந்த், திருமதி லட்சுமி காந்தம்மா ஆகிய மூன்று காங்கிரஸ் எம் . பிக்கள் காங்கிரஸ் எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டதற்காக கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இவர்களில் மோகன்தாரியா ஒரு முன்னாள் மத்திய அமைச்சர்.

*** முன்னாள் ரயில்வே அமைச்சர் மிஸ்ராவைக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு, நபர் ஒருவரைக்கைது செய்துள்ளனர் பொலீசார். இவர் அரசால் தடைசெய்யப்பட்ட "ஆனந்தமார்க்" இயக்கத்தைச் சார்ந்தவராம். இந்திய பிரதம நீதிபதி திரு.ரே.அவர்களின் வாகனத்தின்மீது வெடிகுண்டு வீச்சிற்கும், "ஆனந்தமார்க்" இயக்கத்திற்கும் தொடர்பு இருப்பதாக பொலீசார் கண்டுபிடித்துள்ளனர்.

*** கொழும்பில் கடந்த 76ஆண்டுகளாக இயங்கிவரும் பிரசித்தி பெற்ற "தமிழ்யூனியன்" விளையாட்டுக்கழகத்தின் பெயரை மாற்ற தமிழ்த் துரோகிகள் முயன்று வருகின்றனராம்! இலங்கையின் பிரசித்திபெற்ற "ஓவல்" கிரிக்கெட் மைதானம் "தமிழ் யூனிய" னுடையதாகும்! எனவே தமிழ் யூனியன் என்ற பெயரை "ஓவல்யூனியன்" என மாற்ற சூழ்ச்சி செய்து வருகின்றனராம் இந்தத் தமிழ்த் துரோகிகள்.

*** அடையாறு தொழில் நுட்பக் கழகத்தின் உதவி ரிஜிஸ்டிரார் டி.எஸ்.ராஜகோபாலன் ஸ்கூட்டரில் செல்லுகையில் விபத்துக்குள்ளாகி காலமானர்.

*** தமிழக சட்டக்கல்லூரியின் மாணவர்கள் இனி தமிழிலேயே சட்டம் பயில்வார்கள். சட்ட மாணவர்களும், ஏற்கனவே சட்டம் பயின்றவர்களும், தமிழில் தேர்ச்சி பெறுவதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. விரைவில் நீதிமன்றங்கள் தமிழிலேயே நடைபெறும். இத்தகவலைத் தெரிவித்த சட்ட, தொழில் அமைச்சர் மாதவன், அடிப்படையான சட்டங்களையும், சட்டநூல்களையும் தமிழில் மொழி பெயர்ப்பதற்கென தனிப்பிரிவு ஒன்றை அரசு நியமித்துள்ளது என்றும், இப்பிரிவினர் அரசியல் சட்டத்தினையும், மேலும் 55 சட்டங்களையும் இதுவரை மொழிபெயர்த்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

*** இலங்கையில் புதிய இந்திய தூதுவராக பதவியேற்றார் திரு.எரிக் கொன்சால் .

*** சென்னை நகரில் கறுப்புப் பணத்தில் பங்களா, ஹோட்டல்கள் கட்டியுள்ளவர்கள் பற்றி சோதனை நடத்தி வரும் "வருமானவரிஇலாகா" வின் பறக்கும் படையினர் சொத்தைக் குறைத்துக் காட்டியதற்காக நடிகை ஈ. வி சரோஜாவுக்கும், அவரது சகோதரருக்கும் ரூ1000 அபராதமும் சிறை தண்டனையும் வழங்கியுள்ளது.

*** நடிகை ஜெயலலிதா தனது நண்பர்களுடன் பாகஸ்தராக சேர்ந்து அமெரிக்காவில் ஹோட்டல் ஒன்றைக்கட்டி வருகின்றார். ஹைதராபாத்தில் திராட்சைத்தோட்டம் ஒன்றையும் இவர் ஏற்படுத்தியுள்ளார்.

*** அண்ணா தி.மு.க.விலிருந்து விலகிய 300மகளிர் அங்கத்தினர் புரட்சி அண்ணா தி.மு.கவில் சேர்ந்துள்ளனர் . புரட்சி அ.தி.மு.க வின் பொதுச்செயலாளர் பொற்செல்வி முன்னிலையில் இவர்கள் புதிய கட்சியில் சேர்ந்தனர்.

*** யாழ்ப்பாண மாவட்டத்துக்கு அரசாங்க அதிபராக இருந்த திரு.விமால் அமரசேகரா என்னும் சிங்களவரின் இடத்தில் மீண்டும் ஒரு சிங்களவரை இலங்கை அரசு யாழ்ப்பாண மாவட்ட அதிபராக நியமித்துள்ளது.

*** "காசு போட்டால் பால் புட்டி கிடைக்கும்" இயந்திரங்கள் சென்னை நகரில் நிறுவப்பட்டு வருகின்றது. முதலில் நகரில் 10இடங்களில் இந்த இயந்திரங்கள் நிறுவப்படும்.

*** தமிழக அமைச்சர் என்.வி நடராசன் கடும் சுகவீனம் காரணமாக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார் . சிலநாட்களாக அவர் நினைவு இழந்த நிலையில் இருந்தார்.

*** 45வயதான இந்திப்பட நடிகர் கிஷோர் குமார், 3வது தடவை திருமணம் செய்துகொண்டார். யோகிதாபாலி என்னும் 21வயது கவர்ச்சி நடிகையை இவர் மணம் செய்து கொண்டார். முன்னைய மனைவி மதுபாலா இறந்ததிலிருந்தே உற்சாகமின்றிக் காணப்பட்ட கிஷோர் இப்போது கலகலப்பாக உள்ளாராம்.

*** சென்னை, மீனம்பாக்கத்தில் காயிதே மில்லத் ஆண்கள் கல்லூரியின் ஆரம்பவிழா முதல்வர் கருணாநிதியின் தலைமையில் நடைபெற்றது. கல்லூரி கட்டுவதற்காக தமிழக அரசு 40ஏக்கர் நிலத்தை வழங்கியுள்ளது.

*** ஆயிரம் ரூபாய் நாணயம் ஒன்றை இந்திய அரசு வெளியிடத் தீர்மானித்துள்ளது.

*** அகில இலங்கை தேசிய 'கராத்தே' போட்டியில் இவ்வாண்டும் இரண்டாவது தடவையாக உயர்பிரிவு சாம்பியனாக வெற்றி பெற்றார் கொழும்பைச் சேர்ந்த திரு.எம்.சதானந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குறள் THE GREAT KURAL

True civilisation consists not in multiptying our desires and the means of gratifying them but in the refinement of their quality. The true end of material civilisation is not production but use; not exploitation but ensuring of higher standards of living; not to destroy but promote spiritual culture. Tamil religious literature, especially that of the Saivite Nayanmar and Vishnavite Alvar, promotes the search for true values in life as a necessary step to overcome the delusion of selfish desires.

The concept of karma or fate,whichimplies that a divine dispensation controls our lives, is an integral part of Tamil philosophy and perhaps originally used to reform society of misdeeds with the threat of severe penalties - the beauty of the concept lies in the fact that karma is no respector of persons, even the mighty Pandyan king paid the price.

Thiruvalluvar reiterates that a society in which man cannot practice the virtues which are fundamental to a good, useful life is worthless. He says that one way to attain perfection is to purify the heart by renouncing desire.In the celebrated Bhagavad Gita, Sri Krishna says "work incessantly but without craving for the fruits of action." This is the essence of the karma yoga of spiritual salvation.

### 36. TRUE KNOWLEDGE (= MEI UNARTHAL)

மெய்யுணர்தல்

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

Transl: Wordly matters many, outward beauty/enchanting myth
True wisdom beneath decerns the unfailing truth.

Expl : Knowledge is mere accumulation of facts and figures.The trans--itory nature of mundane objects and their outward appearances often conceal their true nature. True wisdom helps us to see the reality behind objects and events.

### 37. TO OVERCOME DESIRE (=AVA ARUTHAL)

அவா அறுத்தல்

வேண்டாமையன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்பது இல்.

Transl: To crave for no more, ensures mind and body in health
There is nothing greater even heaven can give us wealth.

Expl : There is nothing bad about one enjoying the normal life - what is criticised is the excessive craving. Contentment comes from as a ripened fruit from the tree of wisdom.

### 38. KARMA ( = UL )

ஊழ்

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்றுபவர்.

Transl: With ceaseless active nature, for those its fun
To make Fate itself turn round and run.

Expl : It is amusing that when things go wrong we blame it on fate but when success comes,we claim it as our own achievement.True happinessis the result of continued activity whose fruits,good and bad, are dedicated to the almighty.

\- E N D O F P A R T I - A R A M -

\- K GNANASURYAN(LONDON).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MITCHGLOW LTD

FOR TRAVEL - ELECTRICAL GOODS - PACKING - SHIPPING
WE SELL TICKETS ON AIR CEYLON, AEROFLOT, AIR INDIA, BOAC, MAS, SINGAPORE AIRLINE.
FREE EMERGENCY TRAVEL FACILITIES

| | |
|---|---|
| LONDON - CANADA - LONDON | £95 |
| LONDON - U.S.A - LONDON | £109 |
| LONDON - SINGAPORE - LONDON | £205 |
| LONDON - KUALA LUMPUR - LONDON | £205 |
| LONDON - COLOMBO - LONDON | £165 |
| LONDON - MADRAS - LONDON | £221 |
| LONDON - MAURITIUS - LONDON | £185 |

CONTACT: MR. PATHE 01-580 8049 OFFICE
01-845 1433 HOME
SUITE 517/8, 296 REGENT STREET, LONDON. W.1.

# ANGLO ASIAN SOCIAL CLUB

34 GREENWAY, KENTON, MIDDLESEX.

## Come Fly With Us

TO COLOMBO & THE REST OF THE WORLD

TELEPHONE EVENINGS & WEEKENDS

VICTOR KASINATHAN 01-204 1911
SESHI THIRUMALAI 01-800 9898
HARRY SEEVARATNAM 01-455 9101


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு நாடுகளின் செய்திகள்

## வேல் ஏந்தும் வேலனுக்கு வேல்ஸிலே திருவிழா!

முருகனுக்கு அறுபடை வீடுகளும், ஏழுமலைகளும் உண்டென்று அறிவோம். ஆனல் இன்று அவனுக்கு ஸ்கந்தவேலும் ஒரு வீடாகிவிட்டது. ஆம், வேலனின் பெருமைபாட கடந்த 27ம்திகதி வேல்ஸில் ஸ்கந்தவேல் என்னும் இடத்தில், பிரித்தானிய சைவமாமன்றத்தினரின் முயற்சியாலும், டாக்டர் நாராயணராவ் அவர்களது உபயத்தாலும் அபிஷேகமும் பூஜையும் நடைபெற்றது. அதுவும் குன்றுதோறும் வீற்றிருக்கும் குமரனுக்கு ஏற்றபடி குன்றினிலே அமைந்திருக்கும் குரு சுப்பிரமணியத்தின் பேருதவியினல் இயங்கி வரும் கோவிலிலே நடைபெற்றது. ஈழநாட்டைச் சேர்ந்த சுவாமி முருக பக்தியினல் முருகனுக்கென்று இவ்விடத்தை வாங்கி அதற்கு ஸ்கந்தவேல் என்னும் நாமமும் சூட்டி அதனை வேலனின் புகழ்பாடும் கோயிலாக நடத்தி வருகின்ருர். சுவாமிக்கு பூஜையில் உதவி செய்யும் சிஷ்யர்கள் இந்நாட்டைச் சேர்ந்தவர்கள். அவர்களது பக்தியும், ஆர்வமும் தூய்மையும் மிகவும் பாராட்டத்தக்கது. அவர்களின் தலைச்சீடர் பிறதர் யோசப் ஆவார். முருகனின் புகழ்பாட ஸ்கந்தவேலைவிட சிறப்பான இடம் வேறு இங்கில்லையெனலாம்.

ஜூலை 27ம்திகதி அன்று காலை 7மணியளவில் பிரித்தானிய சைவமாமன்றத்தினரால் ஏற்பாடுசெய்யப்பட்ட, இரண்டு சுற்றுலா வண்டிகளில் நூற்றுக்குமேற்பட்ட லண்டனில் வாழும் தமிழன்பர்கள் வேல்ஸ்நோக்கிப் புறப்பட்டனர். அதுமட்டுமல்ல இன்னும் அநேகர் தங்கள் சொந்த வாகனங்களிலும் வேல்ஸ்நோக்கிப் புறப்பட்டனர். எங்கெல்லாமோ சிதறுப்பட்டு வாழும் மக்கள் அன்று மனதில் ஒரே எண்ணத்துடனும் ஆர்வத்துடனும் ஒரே இடத்தை நோக்கிச் சென்றனர். வழியில் ஒருசில தவிர்க்க முடியாத இடையூறுகள் வந்தபோதிலும் மனதில் உற்சாகத்தோடும், மகிழ்வோடும் வந்த அடியவர்களின் பக்தி உத்தமமானது.

ஸ்கந்த வேலை அடைந்த எம்மை ஆடும்மயில்கள் வரவேற்றன. லண்டனிலிருந்து பூக்களால் அலங்கரிக்கப்பட்ட காவடியொன்றை திரு. கிருஷ்ணபிள்ளை கொண்டுவந்திருந்தார். பூக்காவடியை ஒருவர் சுமக்க நான்கு பெண்கள் முறையே பால்காவடி எடுத்துவர கூட்டத்தினர் பஜனையுடன் பின்தொடர, லண்டனிலிருந்து மன்றத்தினரால் கொண்டு வரப்பட்டிருந்த திருச்செந்தூர் முருகனின் திருவுருவச் சிலையைப் பல்லக்கிலேற்றி அன்பர்கள் சுமந்து பவனிவந்தது கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது. குன்றின்மேல் அமைந்திருக்கும் இக்கோயில் மிகவும் அற்புதமானது. கோயிலின் உள்ளே நுழைந்தவுடன் நாம் வேல்ஸில் இருக்கிருேமா, அல்லது நம் ஊரில்தான் இருக்கிருேமா என்று ஒரு பிரமை தோன்றுகின்றது. எம்மதமும் சம்மதமே என்பதற்கொப்ப எல்லாத் தெய்வங்களுக்கும் பொது இடம் தரப்பட்டிருந்தது. சுவாமி சிரித்த முகத்துடன் அனைவரையும் வரவேற்க, அவரது சிஷ்யர்கள் பூஜைக்குத் தேவையான ஆயுத்தங்களைச் செய்தனர். முதலில் ஒரு சிறிய பூஜை நடைபெற்றது. அதன் பிறகு டாக்டர் நாராயண்ராவ் அவர்கள் பசியோடும், களைப்போடும் வந்த பக்தர்களுக்கு உண்டி வழங்கினுர். இதன் பொருட்டு சமையல் வேலைகளைக் கவனிக்க அவர் குடும்பத்தினரும், திருமதி. ராமநாதனும் மற்றும் சிலரும் முதல்நாளே ஸ்கந்தவேல் சென்றது பாராட்டத்தக்கது. சமையல் பிரமாதமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

எல்லோரும் பசியாறிய பின்னர் பெரிய பூஜை தொடங்கியது. சுவாமி முருகன் நாமம் சொல்ல சைவமாமன்றத்தின் தலைவர் திரு. சபாபதிப்பிள்ளையும், சுவாமியின் சிஷ்யர்களும் உதவி செய்ய குமரனுக்கு அபிஷேகம் நடைபெற்றது. பக்தர்கள் அனைவரும் அமைதியாக இருந்து பூஜையில் பங்குபற்றினர். அரை மணி நேரம் நடந்த இந்தப் பூஜை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. பூஜையின் முடிவில் திருமதி சரோஜினி ராமநாதனும், திருமதி. வைரவமூர்த்தியும் கூட்டுப்பிராத்தனை நடத்தினர். இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முடியாமல் போன அன்பர்களுக்கு ஒரு சில வார்த்தைகள், என்ருவது வேல்ஸ் பக்கம் போனல் ஸ்கந்தவேலுக்கும் போய்வர மறந்து விடாதீர்கள். கதிர்காமம் போய்வந்தது போல் மனதில் ஒரு நிறைவு ஏறபடும்.

சுகந்தி —(லண்டன்).

## சென்னையிலிருந்து அமெரிக்கா திரும்பினுர் பத்மினி

நியூஜெர்சியில் தற்போது வசித்து வரும் தமிழ்ப்பட நடிகை பத்மினி தன் கணவர் டாக். இராமச்சந்திரன், மகன் பிரேம் ஆனந்த் ஆகியோருடன் தமிழகம் சென்று மீண்டும் அமெரிக்கா திரும்பி வந்துள்ளார். சென்னை சென்றதும் பத்மினி குடும்பத்தினர் முதன்முதலாக திருப்பதி வெங்கடேஸ்வரா ஆலயத்திற்கு சென்று வழிபட்டு வந்தனர். சென்னையிலிருந்து திரும்பி வருமுன்னர் சிவாஜி கணேசன் தனது வீட்டில் பத்மினி குடும்பத்தினருக்கு விருந்து ஒன்றை அளித்தார்.

## லண்டனில் மொரிசியஸ் நாட்டின்
## உதவிபிரதமர் சர் வீரசாமி ரெங்கடு

மொரிசியஸ் நாட்டின் நிதிமந்திரியும், உதவிப்பிரதமருமான சர் வீரசாமி ரெங்கடு அண்மையில் லண்டன் வந்திருந்தார். உலகின் ஒரேயொரு தமிழ் உதவிப் பிரதமரான திரு. வீரசாமிரெங்கடு லண்டனில் ராணியாரைச்சென்று சந்தித்தார். பின்னர் கயானு, ஜோர்ஜ் டவுனில் நடைபெறும் நிதி மாநாட்டிற்குச் சென்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டனில் கடல்கடந்த வைணிகம்

லண்டனில் ஆகஸ்டு மாதம் 16ந்தேதியன்று, பிரித்தானிய இந்துக்கோவில் கட்டடநிதிக்காக, திருமதி. முத்து லட்சுமி ரங்கநாதன் அவர்களின் வீணைக்கச்சேரி நடைபெறும் என்றும், அவர் பிறநாடுகளில் எல்லாம் வீணைக்கச்சேரிகள் செய்து பெரும் புகழீட்டியவர் என்றும், அத்துடன் அவர் ஓர் பிரபல வித்வானாக விழங்கும் திரு.கல்யாணகிருஷ்ண பகவதரின் மகள் என்றும் அறிந்ததும் இச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாது அவரது கச்சேரிக்குச் சென்றேன்.

7மணிக்குத் திரு.சங்கரலிங்கம் அவர்களின் தலைமையுரையுடன் கச்சேரி ஆரம்பமாகியது. எவரி போத என்ற "அபோகிராக" வர்ணத்துடன் கச்சேரி ஆரம்பமாகியது. ஆரம்பத்திலேயே அபோகி வர்ணத்தை மிக விறு விறுப்பாக வாசித்து மண்டபத்தில் ஒரு களையை ஏற்படுத்தினர் திருமதி.லட்சுமி ரங்கநாதன்.தொடர்ந்து அவர்வாசித்த "ப்ரோசேவா றெவருரா" என்ற கீர்த்தனையும், "மனஷா எடுலோ" "மரிவேரகதி" யும், அதன் பின் வீணைக்கென்றே, இயற்றப்பட்டதோ என்று எண்ணும் படியாக இருந்த "ரகுவம்ஸ சுதா", "நின் னுவிறு" கீர்த்தனைகளையும் தொடர்ந்து வாசித்து மக்கள் அனைவரையும் இசைவெள்ளத்தில் ஆழ்த்தினர் லட்சுமி. 2மணி நேரம் அவர் இடைவேளையின்றி வாசித்தது நேரம் போவதே தெரியாமல் இருந்தது. அவருக்குப் பக்க வாத்தியம் வாசித்த திரு.கோபால் ரமணி அவர்களும் வழக்கத்திலும் பார்க்கத் திறமையாக மிருதங்கம் வாசித்துக் கச்சேரியைச் சோபிக்க வைத்தார்.

இப்படியான கலைஞர்கள் காலத்துக்குக் காலம் தோன்றி பெரிய மஹானியர்கள் தந்த செல்வத்தையெல்லாம் கையாண்டு, தங்கள் நாட்டில் அல்லாது பிறநாடுகளிலும் சென்று அதை அள்ளிக் கொடுப்பதைப் பார்க்கும்போது, எந்த இசையும் கர்நாடக இசையின் தனித்தன்மையையோ, அதன் பழைய நிலையையோ குறைக்கமுடியாது என்ற உண்மை வெள்ளிடைமலை.

பாரதி கூறிய "திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்ற வாக்கு திருமதி.முத்துலட்சுமிக்கும் உரியதென்று நாம் பெருமையடையக் கடப்பாடுடையோம். இந்த அரிய சந்தர்ப்பத்தை நமக்களித்த பிரித்தானிய இந்துக்கோவில் அறநிலையக்குழுவினர்க்கு எமது நன்றியைத் தெரிவிக்க வேண்டியவர்கள் ஆகின்றோம்.

— திருமதி பத்மா ஜெயசீலன்,லண்டன்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின்
இங்கிலாந்துக் கிளை ஆரம்பம்!

உலகத்தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் இங்கிலாந்துக்கிளை அமைக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்துக்கிளை அமைப்பாளராக திரு. சதானந்தன் நியமிக்கப்பட்டது தெரிந்ததே. பின் வரும் குழுகொண்ட உலகத்தமிழ்ப் பண்பாட்டுக்கழகத்தின் இங்கிலாந்துக்கிளை தற்போது செயல்பட ஆரம்பித்துள்ளது.

தலைவர் : டாக். சாலை இளந்திரையன்.
செயலர் : திரு.ச.ம.சதானந்தன்.
பொருளர் : திரு.கே.அனந்தராஜா.
குழு : திருவாளர்கள் : சி.ஞானசூரியன்
அரங்க முருகையன்
ஆ.சு.இராமலிங்கம்
சோ.சபாபதிப்பிள்ளை
சங்கர் சங்கரமூர்த்தி

தமிழ்ப்பண்பாட்டுப் பெருவிழாவிற்கு பிரதிநிதிகள் : இவ்வாண்டின் முடிவில் சென்னையில் நடைபெறும் உலகத் தமிழ்ப் பண்பாட்டுப் பெருவிழாவில் கலந்து கொள்ள இங்கிலாந்துக் கிளையின் பிரதிநிதிகளாக பீ.பீ.சி தமிழோசை திரு.சங்கரமூர்த்தியும், கிராய்டனைச்சேர்ந்த பாம்பு நிபுணர் திரு.இராமலிங்கமும் செல்கின்றனர். அண்மையில் நடைபெற்ற இங்கிலாந்துக்கிளையின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

லண்டன் தமிழ்ச்சங்கத்தின் பெரியார் — அறிஞர் அண்ணு விழா

அமரர்கள் பெரியாருக்கும் அறிஞர் அண்ணுவுக்கும் விழாவொன்றை எடுக்கின்றனர் லண்டன் தமிழ்ச்சங்கத்தினர் எதிர்வரும் செப்டம்பர் 20ந்தேதி சனியன்று மாலை ஈஸ்ட் ஹாமின், ஈஸ்ட் அவனியுவிலுள்ள டிரினிட்டி கம்யுனிட்டி சென்டரில் விழா நடைபெறுகின்றது. விழாவில் பெரியாரைப் பற்றி திரு. தர்மலிங்கமும், அறிஞர் அண்ணு பற்றி தமிழ்மணி. அரங்க முருகையனும் சொற்பொழிவாற்றுகின்றனர். இசையும்,நடனமும் கூட இடம் பெறும். விழாவின் சிறப்பு அம்சமாக "சாக்ரடீஸ்" நாடகம் இடம் பெறுகின்றது.

பிரித்தானிய சைவமாமன்றத்தின் சதுர்த்தி பூஜை

எதிர் வரும் செப்டம்பர் சனி 6ந்தேதி மாலை 7.30மணிக்கு பிரித்தானிய சைவமாமன்றத்தின் விநாயகர் சதுர்த்தி பூஜை தென்மேற்கு லண்டனில், விம்பிள்டன் கம்யுனிட்டி சென்டர் மண்டபத்தில் நடைபெறுகின்றது. பூஜைக்கு அன்பர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HABIB & COMPAGNIE

14 RUE CLAUZEL- PARIS 9e Mo St. GEORGE
Phones: BOUTIQUE: 5265245 Mr. KADER: 2803356
Mr. MARICAR: 9366961

கும்பகோணம் TSR ஊறுகாய், PS பாக்கெட் புளி, சென்னை கணேஷ்ராம் 777 ஊறுகாய், அப்பளம், கறி, ரசம், சாம்பார், இட்லி பவுடர் வகைகள், மைசூர் சாந்த சிருங்கார் ஊதுபத்திகள், சந்தன சோப், சந்தன முகப்பவுடர், ஹிந்தி - தமிழ் ஒலிப்பதிவு "கஸெட்"கள் முதலியன கிடைக்கும்.

# N.V.&Co.

FINEST ASIAN FOOD STORES
OF SOUTH LONDON

FOR ALL INDIAN & CEYLONESE PROVISIONS
COME & SHOP IN N.V.&Co.

*RICES & SPICES ARE OUR SPECIALITY*

FREE Delivery Service

61 BROADWAY MKT.,
TOOTING SW17.
01-672 8370

# OVERSEAS TRAVEL CONSULTANTS

CONSULT US FOR ECONOMY FARES TO

## Colombo & the Far East

**T. THIYAGALINGAM**

RESIDENCE: **57, Westbury Court**
**Nightingale Lane**
**London SW4**

PHONE 01-675 1415



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### கை கால் முறிந்ததா? கவலுற வேண்டா!
### மாற்றுறுப்பு பொருத்துவோம்.

கை கால் எலும்பு முறிந்தால் அம்மாந்தனை அப்படியே சாகவிட்டது கற்காலம். கை, கால் எலும்பென்ன இதயமே பழுதாகியிருந்தாலும் அதற்கு மாற்றாகச் செயற்கைக்கருவி(PACE MAKER )பொருத்தி மாந்தனை வாழவைப்பது தற்காலம்! மருத்துவத் துறையில் என்னென்ன புதுமைகள் எத்தனை விந்தைகள் நிகழ்ந்து விட்டன! பற்களை இழந்த மாந்தன் பொய்ப்பல் கட்டிக்கொள்கிறன். செயற்கை நொய்வத்தால் பொய்க்காது பெற இயலும். மூக்கின் தண்டு பழுதாகி விட்டதா? அதற்கும் மாற்றுறுப்புப் பொருத்தலாம். குரல்வளையிலே நோய் வந்து பேசும் சக்தி போய்விட்டதா? அதற்கும் மின்னணுவால் ஆன செயற்கைக் கருவி பொருத்தலாம்.

மொத்தத்தில் நம்மிடமுள்ள மகிழுந்தின் கருவியொன்று பழுதானல் அதை மாற்றுக் கருவி பொருத்திப் பழுது பார்ப்பது போல, உடலுறுப்பொன்றில் பழுதேற்பட்டால் பழுதான உறுப்பினை அகற்றிச் செயற்கை மாற்றுறுப்புப் பொருத்த இயலுமென மருத்துவவியலறிஞர் மார் தட்டுகின்றனர். எல்லாம் சரி. உயிர் போய் விட்டால்......? இன்னும் கொஞ்ச நாள் போனல் செயற்கை உயிரும் தந்தாலும் தருவார்கள்!

**கடலின் அடியில் அமைதி காண்போம்!**

உலகில் எப்பகுதிக்குப் போனாலும் போக்கு வரத்து நெரிசல், மக்கள் தொகை மிகவே. இடப் பற்றாக்குறை, வானூர்திகள் எழுப்பும் பயங்கர ஒலி, சாலையிலே ஊர்திகளின் எக்காளம், வானெலியில் புது இசையின் ஓலம்...... அப்பப்பா மாந்தனுக்கு அமைதியே இல்லை. ஆகவே அமைதியாக இவ்வாண்டின் ஓய்வு விடுமுறை நாட்களைக் கழிக்க எங்கே செல்லலாம் என எண்ணித் தொல்லையுற வேண்டா. விரைவில் நாம் ஓய்வை அமைதியாகக் கழிக்க கடல் நீர் மட்டத்துக்குக் கீழே 40 அடியில் அமைக்கப்படவிருக்கும் விருந்து மாளிகைகளில் குறைந்த செலவில் உல்லாசமாகக் கழிக்கலாம். இப்படி எல்லோரும் அங்கே போனல் அங்கே அமைதி இருக்காதே என்கிறீர்களா அதற்கு வேறு ஒரு வழி காண்போம். விரைவில்.

**மகப்பேறு மருத்துவ மனையில் எந்திர மாந்தன்!**

மாந்தர் பலர் செய்யும் வேலையை எந்திர மூளை இலகுவில் செய்வது நாமனைவரும் அறிந்ததே. இப்போது மருத்துவர் செய்யும் பணியையும் எந்திர மூளை மேற்கொண்டுள்ளதாம். மேற்கு மிடில்செம்சு மருத்துவ மனையில் தாய்மைப்பேறு அடையப்போகும் பெண்களைக் கவனிக்கும் பகுதியில் ஓர் எந்திரமாந்தன் பணியாற்றுகிறன். மருத்துவர் ஆணாயிருப்பின் பெண்கள் சில செய்திகளைச் சொல்ல நாணப்படலாம் அல்லவா? இதைத் தவிர்க்கவே இந்த ஏற்பாடு என்று சொல்லப் படுகிறது.

**சாவின் பிடியினின்றும் தப்பிய சிறுவன்!**

நாக பாம்பிடம் உள்ள நஞ்சு ஒரு மாந்தனைக் கொல்லப் போதுமானதே எனினும் பாம்பால் கடிக்கப் பெற்றோர் அனைவரும் செத்து விடுவதில்லை. ஒருவேளை அதிட்டமிருந்தால் பிழைக்கலாமோ. அமெரிக்க ஒகியோ மாநிலத்தில் இராக்வில் எனும் சிற்றூரில் வாழும் மாட்விங்க்ளர் எனும் சிறுவனை நோயுற்ற பேய் வௌவால்(VAMPIRE BAT )உறங்கும் போது உதட்டில் கடித்து விட்டது. அவன் கூச்சலைக் கேட்ட அவன் தந்தையார் உதட்டினின்றும் அவ் வௌவாலைப் பிய்த்தெடுத்துப் பின் பையனையும், வௌவாலையும் மருத்துவரிடம் கொண்டு சென்றார் வௌவாலின் வாயில் தொற்றுநோய் நுண்ணுயிரிகள் இருப்பதைக் கண்டறிந்த மருத்துவர் சிறுவனுக்குத் தடுப்பூசி போட்டார். இருப்பினும் நோய் கண்டது. வாயிலே நுரை தள்ள, கண்கள் வெளிப்பிதுங்க, சிறுவன் அலறித்துடிக்கப் பார்க்கவே கண்ணராவியாக இருந்தது. பையன் சாவது உறுதியென்றாகிவிட்டது.

இந்நிலையில் மருத்துவ வல்லுநர் மைக்கேல் காட்வக் என்பார் அழைக்கப்பட்டார். தொற்றுநோய் நுண்ணுயிரிகள் முதன்முதலில் இதயம், நுரையீரல், மூளை ஆகிய உறுப்புகளைச் செயலிழக்கச் செய்வதாலேயே சாவு ஏற்படுவதாக நன்கறிந்த அவர் சிறுவனின் இம்மூன்று உறுப்புக்களும் செயலிழக்காமல் கவனமாய்ப் பார்த்துக்கொண்டார். தக்க மருந்துகளைக் கொடுத்து வந்தார். பையனின் இளம் உடல் நோயைத் தாக்குப் பிடித்தது. நோயை எதிர்த்தது. இதயம், மூளை நுரையீரல் நன்கியங்கவே சிறுவன் பிழைத்துக் கொண்டான். மருத்துவரின் பட்டறிவும், முன்யோசனையும், பையனின் அதிட்டமும், அவர் பெற்றோர்களின் வேண்டுதலும் அவன் உயிரைச் சாவின் பிடியினின்றும் மீட்டு விட்டன!


# VEE TEE ELL & SONS

1 ST. JULIANS ROAD
ST ALBANS, HERTS AL1 2AZ

TEL: ST.ALBANS 66088

IMPORTS • EXPORTS
FLIGHT BOOKINGS
VARIOUS INSURANCES

WATER PUMPS A SPECIALITY

VILLIERS C12 2 HP STILL £99 c.i.f COLOMBO
" F15 3 HP " £119 c.i.f COLOMBO

THE ABOVE PRICES APPLICABLE ONLY FOR A LIMITED PERIOD
PLEASE ORDER PROMPTLY TO AVOID PRICE INCREASE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தமிழ்த் தொண்டர்கள்

## தெரிந்த பெயர் - தெரியாத செய்திகள்

தமிழ் மொழிக்கும், இலக்கிய மலர்ச்சிக்கும் தொண்டாற்றி வரும் தமிழ்த் தொண்டர்கள் பற்றி தமிழ் மக்கள் பரவலாக அறிந்திருப்பார்கள். ஆனால் நம்மிடையே வாழ்ந்து வரும் இந்த அறிஞர்கள் பற்றிய விபரங்கள் பெரும்பான்மை யாரேருக்குத் தெரியாமலேயே இருந்து வருகின்றது. இந்தக் குறையைப் போக்கி அதே வேளையில் நம்மிடையில் தமிழுக்குத் தொண்டாற்றி வரும் அறிஞர்களுக்கு மதிப்பை அளிக்கும் விதத்தில் முரசின் சிறப்பாசிரியர் தமிழ்த்திரு அரங்க முருகையன் அவர்கள் அளிக்கும் கட்டுரைத்தொடரை "தமிழ் மலர்ச்சி" பகுதியில் வெளியிடுகின்றேம்.

தமிழ்ப்பணியே தம் தலையாய பணியாகக் கொண்டுள்ள
கருத்தொருமித்த கணவன் மனைவியர்

டாக்டர் சாலை இளந்திரையன்
டாக்டர் சாலினி இளந்திரையன்



திரு. சாலை இளந்திரையன் நெல்லை மாவட்டம், சாலைநயினர் பள்ளிவாசல் களக்காடு என்னும் ஊரில் 6.9.1930ல் பிறந்தார். டோனவூர், பாளையங்கோட்டை, சென்னை முதலிய இடங்களில் பயின்று 1954ல் எம். ஏ. (தமிழ் மொழி — இலக்கியம்) பட்டம் பெற்றார். ஒட்டக்கூத்தரின் "குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்" என்னும் நூலின் சிறப்புக்களை ஆராய்ந்து 1956ல் எம்.லிட் பட்டம் பெற்றார். தொடர்ந்து பல ஆண்டுகளாகத் தமிழ்ப் பழமொழிகளைச்சேகரித்து சமுதாய நோக்கில் தமிழ்ப் பழமொழிகள்" என்னும் தலைப்பில் நிகழ்த்திய ஆய்வுக்காகச் சென்னைப் பல்கலைக்கழகம் 1970ல் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது. இந்த ஆய்வு 1975 ஜூலையில் புத்தகமாக வெளிவந்துள்ளது..

1955 முதல் 57வரை சென்னை மாநிலக் கல்லூரியில் துணைப் பேராசிரியராக இருந்த சாலை, 1957 முதல் 59வரை இந்திய மத்திய அரசின் விளம்பரத்துறையில் பணியாற்றினர். 1959ல் தில்லிப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை ஏற்பட்ட போது அதிலே தமிழ் விரிவுரையாளராகவும் துறைப் பொறுப்பாளராகவும் சேர்ந்தார்; 1972 முதல் பேராசிரியராகப் பதவி வகித்துவருகிறார்.

இளமை முதலே இவருக்குத் தேசியப் போராட்டத்தில் ஈடுபாடும் இயக்கத்தில் தொடர்பும் உண்டு. அதன் காரணமாகப் பள்ளி விடுதியிலிருந்து நீக்கப்பட்டார், கல்லூரியிலும் இடம் மறுக்கப்பட்டது. சிற்றிளமையிலேயே தமிழ் இலக்கியங்களைப் பயின்று பாடல் இயற்றும் திறமை பெற்றிருந்த இவருக்கு, 1946 —47 வாக்கில் பாரதிதாசன் கவிதைகளில் ஈடுபாடு ஏற்பட்டது. தொடர்ந்து பெரியார் இராமசாமி, மார்க்ஸ், லெனின் போன்றோரின் சிந்தனைப்பாதை இவரைக் கவர்ந்தது. இதன் காரணமாகவே பக்திக் கவிஞராகவும் இயற்கைக் கவிஞராகவும் இருந்த இவர் 1950 வாக்கில் இடதுசாரி எண்ணங்கள் நிரம்பிய சீர்திருத்தக் கவியாக மலர்ந்தார்.

1949 முதலே இவருடைய கவிதை, கதை, கட்டுரைகள் தமிழக இதழ்களில் வெளிவரத் தொடங்கின. ஆயினும் 1962ல்தான் இவருடைய முதலாவது கவிதைத் தொகுதி ("இளந்திரையன் கவிதைகள்") வெளிவந்தன. இதுவரை கவிதைத் தொகுதிகள், கவிதைக் கதைகள் குறுங்காவியங்கள், கட்டுரைத் தொகுப்புகள், திறனாய்வுகள் என 26 நூல்கள் வெளிவந்துள்ளன. சென்னை மாநிலக் கல்லூரியில் நியமிக்கப்பட்டுள்ள பவல் ஆண்டு மோர்வெறட் அறக்கட்டளைப் பரிசைப்பெற்ற தமிழில் சிறுகதை' என்னும் திறனாய்வு நூல் 1966ல் வெளிவந்தது. 1965 வரை பாரதிதாசன் கவிதைகளின் தாக்கம் இவருடைய பாடல்களில் இருந்து வந்தது; இவருடைய திறனாய்வுகளிலும் மரபுவழிச் சிந்தனை ஓரளவு காணப்பட்டது. அதன்பிறகு வெளிவந்துள்ள கவிதை, கட்டுரை திறனாய்வு நூல்களில் தான் இவருடைய புதிய தடம் தெளிவாக உருக்கொண்டது. எதிலும் முதற்பணியை முன்னேடிப் பணியைச் செய்யவேண்டும் என்ற துடிப்பு உள்ளவர் சாலை; இந்தத் துடிப்பு, அவருடையபல துறைப் புத்தகங்களிலும், "தண்டவாளத் தடத்தில் உருண்டிடும் சக்கரங்களோ நம்மிரு கால்கள்! கண்டவானம் கிடக்கப் புதிய வான் காணச் செல்வன அவ்விரு வீறுகள்!" என்னும் முழக்குடன் வீரநடை போடுகிறது.

பொருளாதாரக் கருத்துக்களில் இடதுசாரி (தீவிர இடதுசாரி) நோக்கு உடையவர் சாலை; அதே நேரத்தில் மடமைக்குள் அமுங்கிப்போன கிழக்கத்திய நாடுகளில் சமுதாயச் சீர்திருத்தமும் பொருளாதாரச் சீராக்கமும் ஒரேநேரத்தில் நடைபெற வேண்டும் என்பது இவருடைய கருத்து. இதன் விளைவாக இதே நோக்குடைய இளையவர்களின் துணையுடன் பொதுவுடமை இயக்கம், பகுத்தறிவு இயக்கம் ஆகியவற்றின் திட்டங்களை இணைப்பதாக 1971ல் புதுப்பெருங்களத்தூரில், (சென்னை — 63) உருவானதே அறிவியக்கப் பேரவை; டாக்டர் சாலை இதன் தலைவர். அறிவுவளம் பொதுமை நலம் என்பது இந்தப் பேரவையின் (Motto) குறிக்கோள் வாக்கியம்.

பல வானெலிக் கவியரங்குகளிலும் அனைத்திந்தியக் கருத்தரங்குகளிலும் பங்கு கொண்டுள்ளார் சாலை. இவருடைய கவிதைகள் இந்தி, குஜராத்தி, உருது முதலிய மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியம் பற்றி இவர் எழுதியுள்ள சில கட்டுரைகள் மேற்கண்ட மொழிகளில் பெயர்த்துள்ளன. இந்தி மொழியில் தயாராகி வரும் இந்திய இலக்கியக் கலைக்களஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியத்தில் தமிழ் இலக்கியத்தைப்பற்றிய 1200 குறிப்புகளை எழுதி அடைவுபடுத்தும் பணி இவருடைய பொறுப்பிலும் தலைமையிலும் நடைபெற்றுள்ளது. தில்லியிலுள்ள (அரசுச் சார்பு மற்றும் அரசுச் சார்பற்ற) பல இலக்கிய நிறுவனங்களோடும், இவருக்குத் தொடர்பு உண்டு. 1973ல் உருவான தில்லித் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவரும் இவரே. தற்கால இலக்கியத்(CONTEMPORARY LITERATURE) துறையில் ஆழ்ந்த பற்றும் ஈடுபாடும் உடையவர் நம் சாலை.

## சாவித்ரி

திருவாட்டி சாலினி (கனகசவுந்தரி) முகவை மாவட்டம் விருதுநகரில் 22.12.1933ல் பிறந்தார். பம்பாய், விருதை மதுரை, சென்னை ஆகிய இடங்களில் பயின்று 1954ல் சென்னை மாநிலக் கல்லூரி வழி எம்.ஏ.(தமிழ்மொழி இலக்கியம்) பட்டம் பெற்றார். "சிலப்பதிகாரச் சொல்வளம் அல்லது சிலம்புச் சொற்களால் புலப்படும் தமிழர் நாகரிகம்" என்னும் ஆராய்ச்சிக்காக 1958ல் எம்.லிட்.பட்டம் பெற்றார். "தமிழில் வாழ்க்கை வரலாற்று இலக்கியம்" என்னும் தலைப்பில் நிகழ்த்திய ஆய்வுக்கு 1973ல் சென்னைப் பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது. இந்த ஆய்வு 1974 ஜூலை மாதத்தில் புத்தகமாக வெளிவந்துள்ளது.

எம்.ஏ. பட்டம் பெற்றபின் இந்திய அரசின் மானியத்துடன் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த சாலினியார் சிறிது காலம் "நெல்லை மாவட்டப் பேச்சுத்தமிழ்" என்பது பற்றி ஆய்வு நிகழ்த்தினார். 1959 முதல் 61வரை தில்லி தயாள்சிங் கல்லூரியில் தமிழ்விரிவுரையாளராக இருந்தார். 1961ல் தில்லியில் திருவேங்கடவன் கல்லூரி உருவான போது அதன் தமிழ் விரிவுரையாளராகப் பொறுப்பேற்ற இவர் 1972 முதல் பேராசிரியராகவும் துறைத்தலைவராகவும் இருந்து வருகிறார். கல்லூரியின் ஆட்சிக்குழுவிலும் மற்ற அமைப்புகளிலும் முக்கியப் பொறுப்பு இவருக்கு இருந்து வருகிறது. 1972 அக்டோபரில், கல்லூரி மாணவர்களை மட்டுமே துணையாகக் கொண்டு இவர் அமைத்த "தமிழ் வரலாறு மற்றும் பண்பாட்டுக் கண்காட்சி" சுமார் ஒருவாரகாலம் நடைபெற்று தமிழர்கள் மற்றும் வேற்றுமொழியினரின் ஒருமித்த பாராட்டைப் பெற்றது.

இளமை முதலே மேடைப்பேச்சில் ஆர்வமும் திறமையும் காட்டி (பல பரிசுகளும் பெற்று) வந்தார் சாலினி. ஆராய்ச்சிகளுக்காக அவர் பெற்ற பரிசுகளும் பல. 1955 முதல் பத்திரிகைகளில் கட்டுரைகளும் திறனாய்வுகளும் எழுதத்தொடங்கினார். இவருடைய கட்டுரைகளும் (கணவர்) சாலையின் கட்டுரைகளும் சேர்ந்த "இரண்டு குரல்கள்" 1964ல் வெளிவந்தது. இருவரும் எழுதிய இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பான "தமிழ்க்கனிகள்" 1965ல் வெளிவந்தது. அடுத்த கட்டுரைத் தொகுப்பு ("தமிழனே தலைமகன்") 1966ல் வெளிவந்தது. சங்க இலக்கிய அடிப்படையில், அக்காலப் பெண்களின் வாழ்வை ஆராயும் கட்டுரைகளாக இருவரும் எழுதிய "தமிழ் தந்த பெண்கள்" முதலில் சிங்கப்பூர்த் "தமிழ்முரசு" இதழில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு, 1968ல் புத்தகமாக வந்தது. இவருடைய கட்டுரைத் தொகுப்பு ஒன்று ("பண்பாட்டின் சிகரங்கள்") 1975 ஜூலையில் வெளிவந்துள்ளது. சாலை இளந்திரையன் அவர்களுடைய கவிதைப் புத்தகங்களின் தொகுப்பாளரும், சாலினியாரே.

மேடைப் பேச்சில் மட்டுமன்றி, வானொலிப் பேச்சிலும் வானொலி நிகழ்ச்சிகளை அமைப்பதிலும் வல்லவர் சாலினியார். 1950ல் (மாணவியாக இருந்தபோதே) திருச்சியில் தொடங்கிய இவரது வானொலிப் பேச்சுப்பணி 1959 முதல் தில்லி வானொலி (தென்கிழக்காசிய ஒலிபரப்பு) மூலம் தொடர்ந்து நடந்து வருகிறது.

## சாலை — சாவித்ரி

சென்னை மாநிலக் கல்லூரியில் ஒன்றாகப்படித்த சாலையர் 1954 ஜூலை மாதத்தில் திருமணம் புரிந்துகொண்டனர். அது முதல் இவர்கள் இருவரும் எந்த நிகழ்ச்சியிலும் செயலிலும் ஒன்றாகவே ஈடுபட்டு வருகின்றனர். 1961ஜனவரியில் சிங்கை மலேசியத் தமிழர்கள் இவர்களை அழைத்து சுமார் ஒருமாத காலம் பல்வேறு இடங்களில் சொற்பொழிவுகள் ஆற்றச் செய்தனர். 1962ல் இவர்கள் இலங்கையில் சுமார் 45நாள் சொற்பொழிவுச் சுற்றுப்பயணம் மேற் கொண்டார்கள்.

1959 முதல் சுமார் ஏழாண்டுகாலம் தில்லித் தமிழ்ச் சங்கத்தில் பல்வேறு பொறுப்புக்களை ஏற்று அதைப் புகழ் நிலைக்கு உயர்த்தியதில் இவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. பம்பாய்த் தமிழர்கள் 1965லும் கல்கத்தாத் தமிழர்கள் 1967லும் இவர்களை அழைத்து இலக்கிய விழாக்கள் நடத்தி மகிழ்ந்தார்கள். 1968ல் சென்னையிலும் 1974ல் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளில் பங்குபெற்றுச் சிறப்பித்தார்கள். 1969ல் இருவரும் மீண்டும் வகுப்பு மாணவர்களாகி "ஐக்கிய நாடுகள் நிறுவனமும் அனைத்துலக நல்லுறவும்" என்னும் துறையில் சான்றிதழ் (D.P.-U.N.I.U) பெற்றார்கள். 1966 முதல் ஒவ்வோராண்டும் (கோடை விடுமுறையின் போது) தென் மாநிலங்களில் சுற்றுப்பயணம் மேற் கொண்டு அறிவியக் கருத்துக்களையும் புதிய இலக்கிய சமுதாயச் சிந்தனைகளையும் பரப்பி வருகிறார்கள்.

தமிழ் ஆராய்ச்சிக்கும் புதுத்தமிழ் வளர்ச்சிக்கும் அடிப்படையான பணிகளிலும் இவர்களின் கவனம் திரும்பியது. மக்களிடையே (பேச்சுத் தமிழில்) வழங்கி வரும் உழவுத்தொழில் தொடர்பான (கலைச்) சொற்களைத் திரட்டி அடைவு படுத்தி வருகிறார்கள். மராட்டியம், பாஞ்சாலம் போன்ற மாநிலங்களில் நடைபெறும் மொழி வளர்ச்சிப் பணிகளைஅவ்வப்போது தமிழக அரசுக்கும் தமிழகப் பல்கலைக்கழகங்களுக்கும், தமிழ் வளர்ச்சித் துறைக்கும் நினைவூட்டி புதிய பணிகளை வற்புறுத்தி வருகிறார்கள். தமிழ் எம்.ஏ. வகுப்பை கால அடிப்படையில் மூன்று எம்.ஏ வகுப்புகளாகப் பிரித்து எம்.ஏ. தமிழ் (பழங்காலம்), எம்.ஏ.தமிழ் (இடைக்காலம்), எம்.ஏ. தமிழ் (இக்காலம்) என்று மூன்று பட்டப் படிப்புகளும், இதே அடிப்படையில் மூன்று ஆராய்ச்சித் துறைகளும் அமைய வேண்டும் என்று எடுத்துரைத்து வருகின்றார்கள்.

எந்தத் துறையிலுமே ஆக்கப்பூர்வ பணிகள் நடைபெற வேண்டும் என்பதில் ஆரா விருப்புடையோர் சாலையர். 1964ல் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் (தில்லியில்) உருவான போது இருவரும் அதற்கு உறுதுணையாக நின்றனர்; 1968ல் இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தை இவர்கள் இருவருமே முன்நின்று உருவாக்கினார்கள். இவர்களும் இணைந்து உருவாக்கிய உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் வெளிநாடுகளில் வாழும் ஏழை எளிய சாதாரணத் தமிழர்கட்குப் பெரும் பயன் விளைக்கவில்லை என்ற கருத்துப் பரவியபோது, இவர்களே முன்வந்து பலநாட்டுத் தமிழ் அன்பர்களின் ஒத்துழைப்போடு 8.1.74ல் (இலங்கை, யாழ்ப்பாணத்தில்) உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் நிறுவினார்கள். சாலை அவர்களைத் தலைவராகக் கொண்ட இந்த இயக்கமே 1975 டிசம்பரில் தமிழ்ப் பண்பாட்டுப் பெருவிழாவைத் தமிழகத்தின் பல இடங்களில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

தமிழன்னையையும் உலகத் தமிழர்களையுமே மக்களாகக் கொண்டுள்ள சாலை — சாலினி நீடு வாழ்ந்து இன்னும் பல அரிய பெரிய தமிழ்ப் பணிகளை செய்து சிறக்க வாழ்த்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAGA FILM SOCIETY

presents

FOR THE ENTERTAINMENT OF THE TAMILS IN THE UNITED KINGDOM

"KALYANA OORVALAM"

STARRING...

K.R.VIJAYA NAGESH MAJOR SOUNDRARAJAN....

AND

THE DOCUMENTARY FILM OF THE .......

INTERNATIONAL TAMIL CONFERENCE

.......HELD IN JAFFNA...

AT THE ODEON CINEMA
wimbledon – London s.w. 19
on sunday the 14 th september '75

film starts at **12.15** p.m

NEAREST UNDERGROUND----WIMBLEDON
NEAREST MAIN LINE -----WIMBLEDON

tickets priced at £1.25

FOR TICKETS PLEASE APPLY BY POST ENCLOSING POSTAL ORDER OR CHEQUES MADE PAYABLE TO..

V.S.GANANATHAN
39 A ST JULIANS ROAD
KILBURN
LONDON N.W.6

FOR BOOKINGS PLEASE PHONE..

540-7304 ( 9 A.M to 9 P.M.) 580-8049 ( Office hours )
845-1433 ( After 6 P.M. )

CANCELLED


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேல்சிலுள்ள முருகன்கோவிலுக்கு லண்டனில் முருகன்கோவில் அமைக்கும் பிரித்தானிய சைவமாமன்றத்தினர் யாத்திரை சென்றனர். இடது: — வேல்ஸ் முருகன் கோயிலின் முகப்பு. வலது: — வேல்ஸ்கோவிலில் பூஜை முடிந்த பின்னர் திருச்செந்தூர்முருகன் திருவுருவச்சிலை பல்லக்கில் பவனி வருகின்றது. கோவில் அதிகாரி குரு சுப்ரமணியம் பூஜை செய்கின்றார்.



வேல்ஸ்முருகன் கோயிலில் ஊர்வலத்துக்கு முன்னர் திருச்செந்தூர் முருகனுக்கு பூஜை — அருகில் இருப்பது மலர்க்காவடி.




முருகன் கோவில் நிதிக்காக முத்துலட்சுமி ரங்கநாதனின் வீணை நிகழ்ச்சி லண்டனில் நடைபெற்றது.



கலிபோர்ணியா கலைநிலைய வயலின் பேராசிரியர் டாக். சுப்பிரமணியம் லண்டனில் இசைநிகழ்ச்சி அளிக்கின்றார்.



லண்டனைச் சேர்ந்த பேரின்பநாயகம் தம்பதிகளின் புதல்விகள் தேனுகா, ராதிகா ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் ஆகஸ்டு 18ந் தேதியன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்பாக நடந்தேறியது.




லண்டனில் அமைக்கப்படவிருக்கும் முருகன்கோவில் நிதிக்காக ஆகஸ்டு 3ந்தேதி மத்திய லண்டன் கிரெகரி மண்டபத்தில் நடைபெற்ற கலைவிழாவில் தாரா ராஜ்குமாரின் மாணவிகள் நடனநிகழ்ச்சி அளித்தனர். இ — வ: கும்மி: செல்விகள், ஜசியா சாந்தமரியா, யோகாம்பிகை சாந்திநாகராஜா. 2. சோலகட்டு நடனம்: செல்விகள். யோகாம்பிகை சாந்திநாகராஜா, லதா மேனன், ஜசியா சாந்தமரியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லண்டனில் ஹறரே கிருஷ்ண இயக்கத்தினரின் 7வது ஆண்டுத் தேர்விழா நடைபெற்றது.




யாழ்ப்பாணம் இணுவில் பிள்ளையார் கோவில் தேர்விழா.



யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டார்.



தாரா ராஜ்குமாரின் நடன நிகழ்ச்சி லண்டன் காமன்வெல்த் இன்ஸ்டிடியூட்டில் நடைபெற்றது.



கர்நாடக அரசின் உயர்அதிகாரி திரு. பால சுப்பிரமணியம் லண்டனில் பிரித்தானிய சைவ மாமன்றத்தின் கார்த்திகைப் பூஜையின் போது உரையாற்றினர்.



லண்டனில் கல்விகற்கும் நந்தகுமார் ரங்கநாதனின் புல்லாங்குழல் அரங்கேற்றம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.



கொழும்பில் வேல் திருவிழாவின் போது.




இந்தியாவின் அவசரகாலநிலைக்கு எதிராக லண்டனில் நடத்தப்பட்ட எதிர்ப்பு ஊர்வலத்தில் இந்தியா, பாகிஸ்தானிய, பங்களாதேஷ் மக்கள் சுமார் 100பேர் கலந்துகொண்டனர். ஊர்வலத்திற்கு லண்டன் பத்திரிகைகள் முக்கியத்துவம் அளித்தன.



லண்டன் சிறுமி மீரா மகரசிங்கத்தின் கவிதை மோரிடசலர்ஸ் கவிதைக் கொத்தில் இடம்பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*We are happy to announce that a delicacy in our country*

**MALDIVE FISH**

is now available in the U.K. at a BARGAIN PRICE.
It is not so much an 'Introductory Offer' but more of a Sale.
Just look at these prices at a fantastic discount.

35p per ¼lb. 65p per ½lb. £1.20p per lb.

15pence p & p per each order of one lb or less. No p & p charge for orders over one lb.

If you want it pulverised 10p extra per lb or less.
Buy now while stock last.

(N B: Further discount for bulk buying will be considered)

For immediate delivery send crossed -postal order or cheque to

MR L X FERNANDO
27 LESLIE GROVE, CROYDON CRO 6TJ.

Or call at the above address - weekdays after 5.30pm Saturdays & Sundays 8.00 AM to 7.00PM.

or Phone 01 - 688 8729.

# IMMEDIATE INSURANCE COVER

Any time! At any Place!!

**HOME**
Is your home Insured for the present value?

**CONTENTS**
Have you Insured your contents&JEWELLERY for all risks?

**MOTOR**
Are you paying more money for your motor Insurance?

**TRAVEL**
Are you Insured for Accident, Medical&other Expenses, Cancellation and Curtailment, Baggage and Personel Liability while you are abroad?

WE SPECILISE IN LIFE ASSURANCE, SAVING PLANS, SCHOOL FEES PLANS, EMERGENCY TRAVEL&PENSIONS.

WE ALSO HELP OUR CLIENTS TO GET MORTGAGES UPTO 100%

FOR MORE INFORMATION PLEASE RING

01-679 1952/3 (Home 01-675 1850) *P. Srinivason*

ANTHONY R. MORGAN& ASSOCIATES
1524 LONDON ROAD, SW16.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராம கண்ணபிரான்
## ~சிங்கப்பூர்~



# உமாவுக்காக

தன் வீட்டு பிரம்பு நாற்காலியில் அமர்ந்திருந்த சி. ஐ. டி தென்னரசு சமீபகாலத்தில் அடுத்தடுத்து நடைபெற்றிருந்த பெண்களின் கடத்தல் பற்றி தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தார். முதல் பெண்ணான சகுந்தலா, அவள் வேலை செய்த அலுவலகத்திலிருந்து வீடு திரும்புகிற வழியில் கடத்தப் பட்டாள். இரண்டாவது மங்கையான மீரு, அவளுடைய கணவன் இல்லத்திலிருந்து அப்புறப்படுத்தப் பட்டாள். மீரு மறைந்த சமயம், அவள் இல்லத்திற்குப் பக்கத்தில் இருந்த ஈர மண் சாலையில் கடத்தல் பேர்வழியின் காரின் டையர்அடையாளம் காணப்பட்டது. ஆனல் அந்த ஒரு தடையத்தால் அப்போதைக்குக் குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியாமல் இருந்தது.

சகுந்தலா, மீரு மறைவுகளைப் பற்றி தீர்வு காண முடியாத வேளையில் தான், என்ெறரு ஆரணங்கு சாவித்ரி என்று பெயர் மாயமாய் மறைந்தாள். அவள் தன் தாய் வீட்டிலிருந்து சுமார் ஒரு மணி நேரத்துக்கு முன்னர்தான் கடத்தப் பட்டிருந்தாள். செய்தி காவல் நிலையத்திற்குக் கிடைத்து, ஸ்தலத்திற்கு விரையும் வழியில் இன்ஸ்பெக்டர் அரங்கநாதன் சி.ஐ.டி. தென்னரசையும் தம்முடன் இட்டுச் செல்வதாகத் தொலை பேசியின் மூலம் அவருக்கு அறிவித்திருந்தார்.

இன்ஸ்பெக்டர் அரங்கநாதன் தம் காரைக் கோலாம்பூர் பிரிக்ஸ்பீல்ட் வீதியை நோக்கி ஓட்டிச்சென்றார். "நகரின் செய்தித் தாள்கள் எல்லாம் ஏற்கனவே மறைந்த பெண்களைப் பற்றி பெரிதாய் வெளியிட்டு, மக்களிடையே மனபீதியை உண்டு பண்ணியுள்ளன. இப்போது சாவித்ரியின் கடத்தல் வேறுநடந்திருக்கிறது!" என்றார் இன்ஸ்பெக்டர் அரங்கநாதன் கவலையுடன். இன்ஸ்பெக்டர் அருகில் வீற்றிருந்த சி.ஐ.டி தென்னரசு "சகுந்தலாவும், மீருவும் திருமணமானவர்கள். சாவித்ரியும் ஒரு குடும்பப் பெண்ணென்றே தெரிகிறது. இல்லறப் பெண்களாகவே கடத்தப் படுவதில் ஏதோ ஓர் அடிப்படை ஒற்றுமை இருப்பதாக அனுமானிக்கிறேன்" என்றார். துப்பறியும் நிபுணர் சொன்னதை இன்ஸ்பெக்டரும் ஆமோதித்தார். சிறிது நேரத்தில் அவருடைய கார், பிரிக்ஸ்பீல்ட் வீதியின் முப்பத்தாறும் நம்பர் வீட்டைத் தொட்டது. அங்கு சாவித்ரியின், தாயாரும், அவள் கணவரும், சில போலிஸ்காரர்களும் இருந்தனர்.

சாவித்ரி கடத்தப்பட்ட தருணம், அவள் தாயார் வீட்டில் இல்லை. வெளியே சென்றிருந்த அவள் வீடு திரும்பிய போது வாசற்கதவு திறந்திருந்ததையும், சோபா நாற்காலிகள் விலகிக் கிடந்ததையும் பார்த்து பயந்து போய், தன் மருமகன் வீட்டிற்கும், நெருங்கியவர்கள் வீட்டிற்கும் டெலிபோன் செய்து, சாவித்ரி அங்கெல்லாம் இல்லை என்பதை தெரிந்து கொண்டாளாம். இதற்கிடையில் சாவித்ரியின் கணவர் போலிசுக்குச் செய்தி அறிவித்திருக்கிறார். சம்பவம் நிகழ்ந்தபோது அக்கம் பக்கத்தில் யாரும் பார்க்கவில்லை. காரணம் சாவித்ரியின் தாய் வீட்டிற்கு எதிரே இருந்தது ஒரு வெற்றுத்திடல். இடப்பக்கத்தில் நீண்ட காலிமனையும், வலப் பக்கத்தில் வெகுதூரம் தள்ளி ஒரு பெட்ரோல் பங்குமே இருந்தன.

இன்ஸ்பெக்டர் அரங்கநாதனும், துப்பறியும் தென்னரசும் சாவித்ரியின் தாய் வீட்டைச் சோதித்தனர். வாயிற்கதவின் கீல் வழியே ஒரு பச்சை நிற துணி கிழிந்த நிலையில் தொங்கிக் கொண்டிருந்தது. அதை எடுத்துப் பத்திரப் படுத்திக்கொண்டார் தென்னரசு.

கோலாலம்பூர் அருந்ததி மண்டபத்தில் வனிதையர் தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடினர், மலேசிய வனிதையர் மன்றத்தினர். அவ்விழாவிற்குப் பெண்களே மிகுதியாகவந்திருந்தனர். தலைநகரின் பிரதான ஆண் நபர்களும் அவ்விழாவிற்கு அழைக்கப்பட்டு வருகை புரிந்திருந்தனர். விழாவில் பாட்டு, நடனம், நாடகம் என பல அம்சங்கள்இடம் பெற்றன. நிகழ்ச்சிகளின் சிகரமாகக் 'கண்ணகிநாடகம்' விளங்கியது. கண்ணகியாக நடித்தவள் (அவள் பெயரும் கண்ணகி தான்) தத்ரூபமாக நடித்தாள். நாடகத்தில் மாதவியுடன் பிணக்குற்று கோவலன் கண்ணகியின் வீட்டிற்குத் திரும்பும் காட்சி வந்தபோது 'ஸ்கிரீன் ரூமிலிருந்த உண்மையான கண்ணகியைக் காணவில்லை!

அருந்ததி மண்டபம் பரபரப்படைந்தது. மேடைக்குத்தாவிய சி.ஐ.டி. தென்னரசு தாம் இன்னார் என்பதைக் கூட்டத்திற்கு ஒரு நொடியில் அறிவித்து விட்டு, யாரும்சிறிது நேரத்துக்கு மண்டபத்தை விட்டு வெளியேறக்கூடாது என கண்டிப்புடன் உத்தரவிட்டார். பிறகு மலேசிய வனிதையர் மன்றத் தலைவியைத் தனியே கண்டு பேசி, அவளிடமிருந்து ஒரு சுருள் தாளைப்பெற்றார். பின்னர் மண்டபத்துக்கு வெளியே விரைந்து கார்கள் செல்லும் வாயிலில் அதுவரை மறைவாய்க் காவல் புரிந்து கொண்டிருந்த தம் உதவியாளரான சகாயத்திடம் சென்று விசாரிக்கத் தொடங்கிறர் தென்னரசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடியற்காலை நான்கு மணிக்கே உங்கள் வீடு வந்து உங்களுடன் இப்படி முக்கியமாகக் கலந்து பேசவேண்டியிருக்கிறது, இன்ஸ்பெக்டர். புரொபசர் குமாரைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? என்று சி.ஐ.டி.தென்னரசு இன்ஸ்பெக்டர் அரங்கநாதனைக் கேட்டார். "மலாயா பல்கலைக்கழக இரசாயனப் பகுதியில் தலைமை விரிவுரையாளராக பணிபுரிந்த சிறந்த விஞ்ஞான மேதை அவர். பிறவிப் பணக்காரர் அவர் வாழ்க்கையில் ஏற்பட்ட அந்த எதிர் பாராத சம்பவத்திற்குப் பின்னர், தம் வேலையை ராஜிநாமா செய்து விட்டு, தம் பங்களாவில் இருக்கும் ஆய்வுக் கூடத்தில் சோதனைகளில் காலங்கழித்துக் கொண்டிருப்பவர். மிகவும் நல்லவராயிற்றே, அவருக்கு இப்போது என்ன?" என்று வினவினார் இன்ஸ்பெக்டர் அரங்கநாதன்.

"அந்தப் புரொபசர் குமார் தான், சகுந்தலா, மீனு சாவித்ரி ஆகிய மங்கையரைக் கடத்திச் சென்றவர். இரவு ஒன்பது மணிக்குக் கண்ணகியைக் களவாடிச் சென்ற குற்றவாளியும் அவர் தான்!"

"விளக்கமாகக் கூறுங்கள் மிஸ்டர் தென்னரசு" என்று பரபரத்தார் இன்ஸ்பெக்டர்.

கடந்த சில வாரங்களாக வீடுகள், அலுவலகங்கள் தவிர பெண்கள் கூடுகின்ற பொது நிகழ்ச்சிகளிலும் நான் அக்கறை செலுத்தி வந்தேன். இரவு நடந்த வனிதையர் விழாவில் பங்குபெற்றவர்களையும், அங்கு வந்திருந்த இருநூறு பெண்கள் ஆண்களையும் பெயர் வாரியாக எனக்குத் தெரியும். மன்றத் தலைவி விடுத்திருந்த விசேஷ அழைப்புக்கு உட்பட்டு வருகை புரிந்து இருந்தோரே அவர்கள். கண்ணகி காணமற் போனவுடனேயே, மண்டபத்தை விட்டு யாரையும் நான் வெளியேற்றாமல், மன்றத்தலைவியிடம் இருந்து பெற்ற பெயர்பட்டியலோடு அங்கிருந்தவர்களைச் சரி பார்த்ததில் குமாரும், கண்ணகியும் அங்கு இல்லாததைக் கண்டு கொண்டேன். மண்டபத்தில் பரபரப்பு தொடங்குவதற்கு, ஐந்து நிமிடங்களுக்கு முன்னர் புரொபசர் குமார் அவசரமாகத் தம்காரில் புறப்பட்டு விட்டதையும், அவர் காரின் பின் சீட்டில் பச்சை புடவை அணிந்திருந்த ஒருபெண் (கண்ணகி) மயங்கிய நிலையில் கிடந்ததையும், சகாயம் மூலம் நான் அறிந்து கொண்டேன். எதிரே ஓடிய மண்பாதையில் பதிந்திருந்த குமாரின் கார் அடையாளத்தைச் சகாயம் படம் பிடித்திருக்கிறார். அந்த அடையாளமும், இரண்டாவதுபெண் மீனு கடத்தப்பட்ட போது விடப்பட்டிருந்த டையர் அடையாளமும் ஒத்துள்ளன. என்று விவரித்தார் தென்னரசு.

"இப்பொழுதே சென்று குமாரை நாம் கைது செய்வோம் வாருங்கள் மிஸ்டர் தென்னரசு" என எழுந்தார் இன்ஸ்பெக்டர் அரங்கநாதன்.

"பொறுங்கள் இன்ஸ்பெக்டர். குமார் தான் அந்த நான்கு பெண்களையும் கடத்தியவர் என்பதை நான் வெகு நேரம் யோசித்தே முடிவுக்கு வந்துள்ளேன். சாவித்ரியின்தாய் வீட்டில் நான் கண்டெடுத்த சேலைப்பகுதியும், நாடகத்தின் அப்போதைய காட்சியில் கண்ணகி அணிந்திருந்த சேலையும் பச்சை வர்ணம் உடையவை. இந்த நிறத்தின் மர்மம் எனக்கு விளங்கவில்லை. மேலும் பிரபல விஞ்ஞானமேதையான குமாரை ஒரு சில குறிப்புகளின் அடிப்படையில் மட்டும் கைது செய்வது எனக்கு உசிதமாகப் படவில்லை. குமார் இல்லாத சமயத்தில் அவர் பங்களாவை நாம் சோதித்துப்பார்த்தால் மேற்கொண்டு ஆதாரங்கள் கிடைக்கும் என்று நம்புகின்றேன் இன்ஸ்பெக்டர், உங்கள் இளைய தம்பி தயாளன் சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தில் ஒரு விஞ்ஞான விரிவுரையாளராகத் தானே பணியாற்றுகிறார். அவருக்கு நீங்கள் ரகசியமாக டெலிபோன் செய்து குமாரைச் சிங்கப்பூருக்கு வரவழைக்கும் படியான ஒரு தக்க காரணத்தைச் சிருஷ்டித்து தொலைபேசி மூலம் குமாருக்குச் சொல்லும் படி செய்யுங்கள்!" என்றார் சி.ஐ.டி.தென்னரசு.

புரொபசர் குமாரின் பங்களா நகரிலிருந்து மூன்று மைல்கள் தள்ளி ஓர் ஒதுக்குப் புறமான இடத்தில் இருந்தது. குமார் இல்லாத அந்தப் பங்களாவிற்குள் சி.ஐ.டி.தென்னரசும், இன்ஸ்பெக்டர் அரங்கநாதனும், மாற்று சாவிகளின் துணையுடன் பிரவேசித்தனர்.

கடத்தப் பட்டிருந்த நான்கு பெண்களுமே அங்கு இருந்தனர். அத்தனை எளிதில் அவர்களைக் கண்டுபிடித்து விட்டதில் இன்ஸ்பெக்டருக்கு ஒரே மகிழ்ச்சி. ஆனால் அவர்களிடமிருந்து குமாரைப்பற்றி புது விபரம் ஒன்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை. சகுந்தலா, மீனு, சாவித்ரி என்ற மூன்று பெண்களின் வலப்பக்க மண்டைகளைப் பார்த்த போது நான்கு அங்குல அளவில் கீறல் கோடுகள் காணப்பட்டன. தனித்தனி அறைகளில் பத்திரமாக அடைக்கப்பட்டிருந்த அவர்கள், தம் பழைய நினைவுகளை முற்றாகத் துறந்திருந்தனர். எது கேட்டாலும் 'குமார், குமார்' என்று கிளிப்பிள்ளைகள் போல் ஓதினர்.

மேல் மாடி அறையில் அடைக்கப்பட்டிருந்த கண்ணகி மட்டுமே சுயநினைவில் இருந்தாள். அவளை விசாரித்ததில், ஸ்கிரீன் ரூமிலிருந்து கழிவறைக்குச் செல்லும்பாதையில் திடீரென்று தன் தோள்பட்டையில் ஏதோ சுருக்கென்று கடித்த உணர்வு ஏற்பட்டது என்றும், அந்தக் கணமே தான் மயங்கி விழுந்து விட்டதாகவும், கண்விழித்துப் பார்த்தபோது பொழுது விடிந்திருந்தது என்றும் தன் எதிரே குமார் நின்றிருந்ததாகவும், அப்போது டெலிபோன் மணி ஒலித்ததாகவும், அதில் பேசிய பிறகு தன்னை அந்த அறையில் பூட்டி வைத்து விட்டு குமார் காரில் வெளியே புறப்பட்டுச் சென்றதாகவும் கண்ணகி தெரிவித்தாள்.

ஆய்வுக் கூடத்தில் காணப்பட்ட நூற்றுக் கணக்கான சோதனைக் குழாய்கள், குப்பிகள், இரசாயனங்கள் ஆகியவற்றில் இருந்தும் தென்னரசால் ஒன்றும் விளங்கிக் கொள்ள முடியவில்லை. குமாரின் படுக்கை அறையில் இருந்த 'ஸ்டீல் பீரோ'வை உடைத்து அதை ஆராய்ந்த போது தான் அவருடைய டைரி கிடைத்தது. அதுவே எல்லாச் சிக்கல்களையும் தீர்த்து வைக்கும் ஓர் அரியபொக்கிஷமாக இலங்கியது. அதை சி.ஐ.டி. தென்னரசும், இன்ஸ்பெக்டர் அரங்கநாதனும் ஆவலுடன் படிக்கலாயினர்

ஜனவரி 6 : கடந்தமாதம் சான்பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற விஞ்ஞான மாநாடு ஒன்றில் மனிதனின் மூளையில் சிகிச்சை செய்து, அவன் நடத்தையைமாற்ற முடியுமா என்பது பற்றிய கருத்து பரிமாற்றம் நடந்தது. அச்செய்தியை 'அறிவியல் மஞ்சரி'யில் நான் படித்தபோது எனக்கு அதில் ஆர்வம் பிறந்தது. ஜனவரி11 : மாநாட்டில் பங்குபெற்ற சில ஆராய்ச்சியாளர்களோடு கடிதத் தொடர்பு கொண்டேன். பிப்ரவரி5 : எனக்கு வந்த பதில் கடிதங்களுள் ரஷ்ய ஆராய்ச்சியாளரான ஐக்கு சோவின் கடிதம் என்னை வெகுவாகக் கவர்ந்தது. மனித மூளை பலபல பகுதிகளைக் கொண்டது என்றும், ஒவ்வொரு பகுதியும் மனிதனின் ஒவ்வோர் உணர்ச்சியையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் இயக்கத்தையும் ஆளுகின்றது என்றும், அறுவை சிகிச்சை வழி மூளையின் குறிப்பிட்ட பகுதிக்குள் இரசாயனக்கலவைகளை ஊசிமூலமாகச் செலுத்தி, ஆசை, அச்சம், கோபம், போன்ற மனோநிலைகளைத் தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ, உண்டாக்க முடியும் என்றும், எந்தெந்த இரசாயனக்கலவை என்பது விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களின் கண்டு பிடிப்புகளில் உள்ளது என்றும், அவற்றால் மனிதகுலம் நன்மையடைய வேண்டுமென்று ஜக்குசோ வரைந்திருந்தார். பிப்ரவரி9: என் பல்கலைக்கழக பணி நேரம் போக மற்றபொழுதில் என்பங்களாவின் ஆய்வுக் கூடத்தில் இரசாயனக் கலவைகளின் கண்டுபிடிப்பில் ஈடுபட்டேன். என் உயிரினும் இனிய மனைவி உமா என் ஆராய்ச்சிக்குப் பெருமளவில் உற்சாகமூட்டி வந்தாள். மே12: மூன்றுமாத அயரா உழைப்பில் மனிதனின் பெரும்பாலான உணர்ச்சிகளை மாற்றவும், கட்டுப்படுத்தவும் கூடிய இரசாயன மருந்துகளை கண்டு பிடித்தேன். கினிபிக், எலி போன்ற பிராணிகளின் மூளைக்குள் நான் கண்டுபிடித்த கலவைகளைச் செலுத்தி வெற்றி கண்டேன். என் வெற்றியை வெளியுலகிற்குத் தெரிவிக்க எண்ணியிருந்த வேளையில் தான் அந்தக் கொடுமை நிகழ்ந்தது.

நேற்றிரவு என் பங்களாவிற்குள் நுழைந்த மூன்று முகமூடித்திருடர்கள், உமாவின் நகைகளைப் பறித்ததோடு, என்னைக்கட்டிப் போட்டு அவள் பெண்மையையும் பறித்துச்சென்றனர். என் வாழ்வின் ஒளிச்சுடரான உமா அந்த அதிர்ச்சியிலேயே இறந்து போனாள். ஜூலை19: பல்கலைக்கழகத்தில் அடிக்கடி லீவு போட்டபடி மரித்துப்போன என் உமாவின் நினைவாகவே என் பங்களாவில் முடங்கிக் கிடக்கிறேன். அவளைப்பற்றிய எண்ணங்களும் இந்தடைரியுமே இப்பொழுதுஎன் உற்ற துணைகள். ஆகஸ்ட்6: என் இன்ப வாழ்க்கையை இருளடையச்செய்த அந்தத் திருடர்கள் பிடிபட்டுத் தண்டனை அடைந்தனரா என்று அடிக்கடி தலைமை காவல் நிலையத்தில் விசாரித்தவாறு இருக்கிறேன். அவர்கள் இதுவரையில் சிக்கவில்லை என்றே பதில் கிடைத்தவாறு இருக்கிறது. ஆகஸ்ட்18: திடீரென்று இந்த மனித சமுதாயத்தின் மீது எனக்கு வெறுப்பு தோன்றியது. அந்த மூன்று கயவர்களைத் தண்டிக்கும்போக்கில் நானே என் ரீதியில் மனித ஜாதியைப் பழிவாங்க முடிவு செய்தேன். என் உமா அழிக்கப்பட்டதைப் போல, பலகும்பப் பெண்களின் வாழ்வையும் அழிக்க எண்ணினேன். இத்திட்டத்திற்கு என் அரிய விஞ்ஞான கண்டுபிடிப்பைப் பயன்படுத்த விரும்பினேன். ஆகஸ்21: என் வேலையை ராஜிநாமா செய்தேன். என் பங்களாவில் ஊழியம் பார்த்து வந்த வேலையாட்களை நிறுத்தினேன். செப்டம்பர்4: சகுந்தலா என்ற பெண்ணுக்கு மயக்க ஊசி போட்டு என்காரில் கடத்திவந்து அறுவை சிகிச்சை வழி அவள் மூளையின் பாலுணர்வு பகுதிக்குள் நான் கண்டுபிடித்த இரசாயனக் கலவையை செலுத்தினேன். சிகிச்சைக்குப் பிறகு கண்விழித்த சகுந்தலா தன் பழைய நினைவையெல்லாம் மறந்து என் ஒருவனின் நினைவையே பெற்று என் மீது காம உணர்வு மிக்கவள் ஆனாள். பின்னர் அவள் தூய்மையைக் கெடுத்தேன். அதை என் உமாவுக்காகச் செய்தேன். அக்டோபர்6: மீறவைக் களவாடி வந்து பழி தீர்த்தேன். நவம்பர் 1: இன்று சாவித்ரியை மடக்கினேன். முன்போல் திட்டமிட்டு இவளை நான் கடத்தவில்லை. பிரிக்ஸ்பீல்ட் வீதி வழியாக நான் என் காரில் சென்றுகொண்டிருந்த போது சாவித்ரி அந்த வீட்டு ஜன்னலருகே அமர்ந்திருந்தாள். அவள் உடுத்திருந்த பச்சை நிறசேலை என்னை அந்த விநாடியில் மூர்க்கனாக்கியது. உமா சீரழிக்கப்பட்டபோதும் இதே நிற சேலையைத்தானே அணிந்திருந்தாள்! சாவித்ரியுடன் போராடி அவளை என் காருக்குள் தள்ளி மயக்க ஊசியால் மயக்கம் அடையச் செய்து அவளைக் கடத்தினேன். அப்போது அங்கு யாரும் இல்லாதது என் முயற்சிக்கு வெற்றியளித்தது. நவம்பர்18: கண்ணகியின் நடிப்புத்திறமையை விட அவளைப்பற்றி நாடகப் பாத்திரங்கள் 'கற்பரசி' ஒழுக்கம் வாய்ந்த 'பெண்ணரசி' என்றெல்லாம் புகழ்ந்து பேசிய வசனங்கள் என் உமாவின் இழப்போடு ஒப்பிட்டபோது என்னைக் கேலிசெய்வதாக இருந்தன. மேலும் அப்போதைய காட்சியில் கண்ணகி தரித்திருந்த சேலை அந்தப் பாழாய்ப்போன இரவில் உமா அணிந்திருந்த பச்சை சேலையைப் போலவே இருந்தது. திரைக்குப் பின்புறமாகச் சென்று சமயம் பார்த்து கண்ணகியைக் கடத்தி வந்தேன்.

புரொபசர் குமாரின் டைரியைப் படித்து முடித்ததும், குமாரின் குற்றவிளக்கம் முழுதும் இதில் இருக்கிறது இதைவிடச் சிறந்த ருஜ வேறு ஒன்றும் இருக்கமுடியாது. இப்படிக் குமார் எழுதாமல் இருந்திருந்தால் அவரைக் குற்றவாளி ஆக்குவது சிரமமாய் இருக்கும். என்றார் சி. ஐ. டி. தென்னரசு. என் தம்பி தயாளனுக்கும், சிங்கப் பூர் போலீஸ் இலாக்காவிற்கும் அவசர தகவல்அனுப்பி அந்நாட்டிலேயே குமாரைக் கைது செய்யும்படி செய்வேன் என்றார் இன்ஸ்பெக்டர் அரங்கநாதன்.

கடந்த இரண்டரை மாதங்களாகக்கடத்தப்பட்ட பெண்களின் மர்மத்தை விளக்கியதோடு புரொபசர் குமாரின் தீய செய்கையைப்பற்றி நகரின் எல்லா பத்திரிக்கைகளும் பிரசுரித்தன. அத்துடன் போலீஸ் வைறகயிடநனர் சி. ஐ. டி. தென்னரசைத் தனிப்பட்ட முறையில் பாராட்டிய செய்தியையும் அவை வெளியிட்டிருந்தன.


# ORIENT SERVICES

58 YORK ROAD, NEW BARNET, HERTS. EN5 1LJ
TEL: 01-449 7268 TELEX 25691 MAGNACARTE LDN

## WE ARE AT YOUR SERVICE FOR

TRAVEL: – ECONOMY FARES – WORLD WIDE SERVICE. DISCOUNTS FOR GROUPS AND FAMILIES. SPECIAL FARES TO BOMBAY,MADRAS,COLOMBO & SINGAPORE.

INSURANCE: – ALL FORMS OF INSURANCE EFFECTED WITH REPUTABLE COMPANIES

FINANCE –BUSINESS FINANCE HOUSE PURCHASE & PERSONAL LOANS ARRANGED


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Shree Krishna South India Restaurant

194 Tooting High Street, London, S.W.17
Telephone: 01-672 4250
(Prop: R. Ramanarayanan)

Masala Dosai—Uppuma—Iddly—Vadai—Dahi Vadai—Adai—Avial—Sambar
Rasam—Puri—Chapathi—Paratha

Nearest Tube: Tooting Broadway & Colliers Wood
Catering for Weddings & Parties



## LAWNFORD LTD.

**LEADERS IN QUALITY FASHION FABRICS**

DIRECT IMPORTERS, EXPORTERS, WHOLESALERS AND RETAILERS.

LARGE STOCKISTS OF:
JAPANESE PLAIN AND PRINTED NYLON GEORGETTE SAREES AND LUREX BROCADES.
SPECIALISTS IN ENGLISH CURTAIN MATERIALS
ALL THESE AND MANY MORE VARIETIES AVAILABLE AT MOST KEENEST PRICES.

VISIT US AT
COMMERCE AND INDUSTRY HOUSE
31 MIDDLESEX STREET
ALDGATE, LONDON, E1 7AA
Tel.: 01-247 7129 Cables: YAULEE, LONDON, S.W.19
SITUATED IN THE WORLD FAMOUS PETTICOAT LANE MARKET AREA
UNDERGROUND STATIONS:
ALDGATE, ALDGATE EAST, LIVERPOOL STREET
WAREHOUSE AT 171 ARTHUR ROAD, WIMBLEDON PARK, LONDON, S.W.19
Tel.: 01-946 6914

# RAJESH TRAVELS



LOWEST FARE TO SINGAPORE - BOMBAY
MADRAS - TRIVANDRUM & ALL OVER THE GLOBE.

PROPRIETOR: DEVADASA PANICKER, 20 CAMPBELL ROAD, EAST HAM, LONDON E 6.
[TEL: 01-472 2306]

# MADRAS INDIA
## RESTAURANT


*South Indian Food Speciality*
Open 12 to 3 p.m.
and
6 p.m. to midnight

325 GRAY'S INN ROAD, W.C.1
100 yards from Kings Cross Station

*Speciality:*
IDDLY
VADAI
MASALA DOSAI
SAMBAR
RASAM, etc

Res: 01-837 4544.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்புள்ள ஆசிரியருக்கு

## இந்தியாவா? இந்திராவா?

தங்களின் ஆனி இதழ் தலையங்கத்தில் நாட்டை ஒருமைப்பாட்டுடன் முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்லக் கூடிய தனிப்பட்ட தலைவர் இல்லாதநிலை என்று குறிப்பிட்டிருப்பது, இந்தியா விடுதலை அடைந்த நாளிலிருந்து இந்திய அரசியல் வாதிகளும் எழுத்தாளரும் பாடிய கீறல்விழுந்த இசைத்தட்டின் ஒரு பகுதியை மீண்டும் கேட்டார்போல் உள்ளது.

மறைந்த மேதை நேரு அவர்கள் காலத்தில் நேருவுக்குப்பின்னுல் இந்தியாவை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லக் கூடிய தனிப்பட்டதலைவர் இல்லாததால் இந்தியா முன்னேற, நேருவின்கைகளைப் பலப்படுத்துவோம் என்று அறிஞர் முதல் பாமரர் வரை பேசி வந்தனர். நேருவின் மறைவுக்குப்பின் இந்தியா உருக்குலைந்தா போயிற்று? மக்களாட்சி என்பது தனிநபர் ஆட்சியா? ஒரு தலைவர் மறைந்தால் வேறு தலைவர்கள் தோன்றவே மாட்டார்களா? இன்றைய சாரதி இந்திரா அவர்கள். நாளைய சாரதி ஒருவர் தோன்றுமலோ, தேவைப்படும்போது மீள்றுமலோ, போகப்போவதில்லை. இந்தியாவின் அச்சாணி இந்திய மக்களே. பலம் வாய்ந்த இந்திரா வேண்டும் என்பதிலோ பலம் வாய்ந்த இந்தியா வேண்டும் என்பதிலோ கருத்து வேறுபாடில்லை. ஆனல் இந்திராவுக்குப்பின் இந்தியா இல்லை என்ற அச்சத்தை வித்திட்டால் இந்தியாவில் மக்களாட்சி என்றும் தழைக்காது.

சீதம், மான்செஸ்டர் 8.

(மக்களன்பன்.)

## அடிமேல் அடிவைத்தால்

நல்லூரான் எழுதியது போல ஈழத்தமிழர்களின் நிலைபற்றி உலக அபிப்பிராயத்தைக் கிளப்ப வெளிநாடுகளிலுள்ள தமிழர்கள் பலவற்றைச் செய்யலாம் தான். ஆனல் இங்கிலாந்தில் உள்ள தமிழர்கள் நெல்லிக்கனி மூட்டைசிதறுவது போல அருக்கொரு சங்கம் ஆரம்பித்து தமக்குள்ளேயே சண்டைகளை வளர்த்து வரும் வேகத்தில் சாதனைகளுக்கு எல்லாம் எங்கிருக்கிறது நேரம்.

கட்பர்ட், லண்டன் தெ.கி.6

எஸ்.பாலேந்திரா.

## வதந்திகள் பலவிதம்

சில மாதங்களுக்கு முன்னர் தலைசிறந்த தமிழ்நடிகர் ஒருவர் காலமாகிவிட்டார் என்ற செய்தி லண்டன் முழுவதும் பரவியது. அந்த செய்தியைக் கேட்டதும் என்போல்பலர் துயரமடைந்திருப்பார்கள் என்பது நிச்சயம். லண்டன் முரசிற்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட பின்னரே இந்தச்செய்தி வெறும் வதந்தி எனநான் அறிந்தேன். கடந்தமாதம் ஈழத்தமிழர்களின் தலைவர் ஒருவர் காலமாகி விட்டார் என்ற செய்தியைக் கேள்வியுற்றதும் உண்மையிலேயே நான் அதிர்ச்சியடைந்து விட்டேன். அதுவும் வெறும் வதந்தி எனப் பின்னரே அறியவந்தேன். லண்டனில் கூடவா இப்படிப் பொய் வதந்திகள் மலியவேண்டும்.

டேட்டிங்,லண்டன் தெ.மே.17.

தமிழ்மலர்.

## பசி ஆறுவதற்கு

பாரிசில் தமிழ்ப்படம் காட்டப்படுகின்றது என அறியவரும் போதெல்லாம் என் குடும்பத்தை அழைத்து தூரம் பார்க்காது வந்து விடுகின்றேன். தூரத்தில் வரும் எம்போன்றவர்களுக்கு பசி ஆறுவதற்கு வசதியாக ஏற்ற குடிவகைகள், தின்பண்டங்கள் இவைகளை மண்டபத்திலோ அல்லது அருகாமையிலோ படம் காட்டுகின்றவர்கள் வைத்திருந்தார்களானல் அதுவும் கூட நல்ல ஒரு சேவையாக இருக்கும்.

லியோன்.

அ.கோவிந்தசாமி.

BUSINESS HOURS:
MON-FRI. 9AM - 8PM
SAT. 9AM - 2PM

NITHY MOTORS
49 Wrythe Lane
Carshalton
Surrey

TYRES, BATTERY, STARTORS, ALTERNATORS, DYNAMO, WATER PUMP, BRAKES, EXHAUST.

MOTORISTS!

ARE YOU LOOKING FOR PROMPT RELIABLE SERVICE AT REASONABLE COST? PLEASE RING 01-641 0284

FULLY COMPREHENSIVE SERVICE, MECHANICAL REPAIRS, CLUTCHES, ENGINE, GEAR BOX, AXLE, BRAKE RELINE, ELECTRICAL REPAIRS.

COLLECTION & DELIVERY SERVICE AVAILABLE
BRITISH, CONTINENTAL & JAPANESE CARS.

PROPRIETOR: R SIVANITHY

EMERGENCY BREAKDOWN SERVICE
After Hours RING:
01-684 9721
01-660 8701

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>வரப் பெற்ருேம்!</u>

நூல் : தமிழோசை.
சிறப்பாசிரியர் : புலவர் த.ச. தமிழனர்.
வெளியிட்டோர் : தமிழகம் திருவாரூர் இயற்றமிழ்ப் பயிற்றக வெளியீடு.

தமிழ்த்தென்றல் திரு. வி.க.வின் உருவப்படத்தை முகப்பில் ஏந்தி, தவஞானி சுத்தானந்த பாரதியாரின் நேரியம் ( பேட்டி) பாவலரேறு பெருஞ்சித்திரனரின் திரு. வி. க. பற்றிய பாடல் , இலக்கணவேலி, (பூம்புகார் புதுக்கும் பணியில் நேர்ந்த பிழைகளைச்) சுட்டிக் காட்டுகிருேம். அயலகச் (இங்கிலாந்து) செய்தியாளரின் முடங்கல் போன்ற இன்ன பிற பகுதிகள் உள்ளன.

விளம்பரங்களும், திரைப்படத் திறநய்வும் கூட தனித்தமிழிலே எழுதப்பட்டுள்ளன. திரைப்படத் திறநய்வு சற்று நீளமாக உள்ளது எனலாம்.

பள்ளித் தேர்வுக் கூட நகைச்சுவை மிகச் சிறப்பாயுள்ளது. (உரிய நேரமாகிவிட்டதால் விடைத்தாட்களை ஒன்ருக நூல் கொண்டு கட்டுவதைக் குறிக்கு முகத்தான் தமிழாசிரியர், "கெட்டிமேளம் கொட்டி விட்டது. கட்டுங்கள், கட்டுங்கள்.. துணையேற்றவர்கள் மட்டும் நூல் வாங்கிக் கொள்ளுங்கள் எனல்").

மொத்தத்தில் தமிழோசை தேனுக இனிக்கிறது. தமிழோசை நிலைபெற்று நீடுவாழ வாழ்த்துகிருேம்!

துறவி , (லண்டன்).

<u>போராட்டங்கள்</u>



முப்பது ஆண்டுகள் காலம் காந்தி மகாத்மா நடாத்திய போராட்டமோ அல்லது 1949ல் இந்தியாவில் அமுலுக்கு வந்த தீண்டாமை ஒழிப்புச் சட்டமோ, ஒன்றுமே இருபத்தைந்து நூற்ருண்டுகள் பழைமையான மனுதர்ம நூலின் விதிகளை மாற்றும் சக்தியற்றன போலும்! இல்லாவிட்டால் அமரர் காந்தியின் "ஹரியின் குழந்தைகட்கு" (HARIJANS) நாளாந்த வாழ்க்கையே நாளுக்கு நாள் வலுக்கும் உயர்குடி மக்களின் கொடுமைகளிலல் உயிர்தப்பப் போராடும் வாழ்க்கைப் போராட்டமாக மாறும் போலிருக்கிறது. உதாரணத்துக்குச் சில செய்திகள்:

பெங்களூருக்கு அருகேயுள்ள காளியூர் கிராமத்தில் அரிசனர்களின் பல குடிசைகள் தீக்கிரையாகினவாம். பலர் மூர்க்கமான தாக்குதல்களுக்கு ஆளானர்களாம். அவர்கள் செய்த குற்றம்! உயர் சாதிக்காரர் வாழும் தெருவழியாக ஒரு அரிசனக் குடும்பம் சென்றதே என அறியப்படுகிறது. பீகாரிலுள்ள பீஜாப்பூரிலோ நிலைமை இன்னும் பயங்கரம்! இருபத்தியாறு அரிசனக் குடும்பங்கள் உயிருடன் கொழுத்தப்படும் ஆபத்திலிருந்து உயிர்தப்பின. அவர்களது குற்றமும் சாதாரணமானதல்லவாம். ஒரு உயர்சாதிக் காரரின் கிணற்றிலிருந்து தாகத்துக்குத் தண்ணீர் அள்ளிக் குடித்தார்களாம் அவர்கள். தென்னிந்தியாவுக்கு இது பழைய செய்தி. கீழ்வெண்மணிக் கிராமத்தில் பல அரிசனமக்கள் ஒரு குடிசைக்குள் அடைக்கப்பட்டு உயிருடன் தீக்கிரையானர்கள். கருசமார் என்னும் அரிசனரின் மார்பைத் துப்பாக்கிக் குண்டால் துளைத்தாராம் அவரது முதலாளி. கொதிக்கும் வெயிலில் சுமையுடன் மெதுவாக நடந்தது தான் அவர் செய்த குற்றம். இது நடந்த இடம் உத்தரப் பிரதேசத்திலுள்ள பந்தா என்னும் கிராமம்.

சட்டத்தால் மட்டும் எதையும் சாதித்து விட முடியாது என்பதைத்தான் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. 1968ல் உத்தரப் பிரதேசத்தில் மட்டும் 5474கொடுமைகளுக்கு அரிசனர்கள் உள்ளானர்கள் என்று போலிஸ் பதிவு ஏடுகள் கூறுகின்றன. இதனைக் கட்டுப்படுத்த ஏற்படுத்தப்பட்ட விசேட பொலிசார் 1973ல் அரிசனர்களைக் கொடுமைகளுக்குள்ளாக்கும் 20,000 குற்றங்களை விசாரிக்க நேர்ந்தது!

இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அனைத்து குடிமக்களுக்கும் சாதிமதபேதமற்ற சமஉரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆனல் இதுவரை எதிர் நீச்சலடித்து முன்னே வந்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. பாரதப் பிரதமர் பதவிக்காக முன்றேடிக் கொண்டிருந்த திரு ஜகஜீவன்ராம் ஒரு "ஹரியின் குழந்தை" பம்பாயில் தாலிற்பந்தர்கள் என்னும் ஒரு இயக்கம் அரிசனர்களின் உரிமைக்காகப் போராடுமாறு உருவாக்கப்பட்டுள்ளது. வங்காளத்தில் உருவாகிய நக்ஸலைட்டுகளின் கணிசமான அரிசனர்கள் இருந்திருக்கிருர்கள். கொடுமைக்கார நிலப்பிரபுக்களை கொன்றெழிப்பது "நக்ஸலைட்டுகளின்" நோக்கங்களில் ஒன்று என்பதை அவர்களது இயக்கம் பற்றிய செய்திகளிலிருந்து அறியலாம். "உழுபவனுக்கே நிலம்" என்னும் அவர்களது குறிக்கோள், இரண்டு [illegible] பிரதமரால் அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்களில் அடங்கியிருக்கிறது.

- விஜயேந்திரன் (லண்டன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# THE AKBAR TANDOORI

**115 WESTBOURNE GROVE**
**LONDON, W.2**

We specialise in:—
TANDOORI CHICKEN
SHEEK KEBAB
CHICKEN & MUTTON TIKKA
NAN
AND CURRIES

For Reservation—
**Tel.: 727 8938/6416**

TAKE AWAY SERVICE
AND PARTIES CATERED FOR

Nearest Tube: Notting Hill Gate
Queensway
Bayswater

Correspondence:—
45, HOLLAND VILLAS RD.,
LONDON W14 8DH

Cable: GEMROOT, LONDON, W.14
Tel. 01-602 4191

*M. S. A. J. Maricar*

(formerly of Pitchai Thambys)
Famous Jewellers & Watch
Dealers.

NOW
BUYING AND SELLING
Precious Stones & Diamonds.

LONDON DIAMOND BOURSE
01-405 8671

LONDON DIAMOND CLUB
01-405 0734

NOW SERVES YOU ALL—AROUND LONDON
WITH THE OPENING OF IT'S NEW BRANCHES AT
EAST HAM & WEMBLEY



EXCLUSIVE

# BHAVNEETA

## NOVELTIES

# Sarees

LARGE SELECTION IN SILK,
COTTON AND NYLON SAREES.
ALSO STAINLESS STEEL KITCHEN
UTENCILS AND ALL INDIAN
MUSICAL RECORDS.

30 HAMPSTEAD ROAD
LONDON NW1 2PH
Tel: 01-387 0230
Tube: WARREN STREET & EUSTON

2 THE ARCADE,
WESTBURY AVE.,
LONDON N22 6BL
Tel: 01-889 5838
Tube: TURNPIKE LANE

4 TOOTING HIGH STREET
TOOTING
LONDON SW17 ORG
Tel: 01-672 4929
Tube: TOOTING BROADWAY

142 EALING ROAD
WEMBLEY
MIDDX HA0 4B
Tel: 01-903 3449
Tube: WEMBLEY

356 HIGH STREET
NORTH, EAST HAM
LONDON E12
Tel: 01-472 6782
Tube: EAST HAM

# ~ தமிழ் இலக்கியம் மூலம் வாழ்வில் மறுமலர்ச்சி ~

- தமிழ்த்திரு சி ஞானசூரியன்.

<u>கம்பராமாயணம்:</u> எவற்றிலும் குற்றம் களைந்து குணம் கொள்வது தான் உயர்ந்த பண்பு. குறைகளை மிகைப்படுத்துவது மனித இயல்புக்கு முரண்பட்ட செயல். இதைத் தெரிந்த பின்னும் குறைகூறுவதை இன்னும்ஒரு கலையாக வளர்த்து வருகின்றனர் எமது தமிழ்ச் சமுதாயத்தினர். ராமாயணத்தைக் 'காமரசம்' என்றும், 'சூரியச்சதி' என்றும் கூறுவதால் மட்டும் தமிழையும் தமிழரையும் வாழ்விக்க முடியாது. அஞ்சியாகிலும், அன்பு பட்டாகிலும், நெஞ்சம் வாழி நினைத்தாற்தான் தமிழர் சமுதாயம் உருப்படும், ஒற்றுமை வளரும், தமிழினம் தலைநிமிர்ந்து நிற்கும்.

ஒரு நாட்டில் இலக்கிய வளர்ச்சியும், பயிற்சிப்பண்பின் நலமும் பெருகவேண்டுமாயின் அந்நாட்டுப் புராதன இலக்கியங்களாற்தான் அது நன்கு கூடுவதாகும். தேசியப் பற்றும் மொழிப்பற்றும் எமது அரும் பெரும் பண்டை இலக்கியக் கல்வியினால் உண்டாவதேயாம். மொழிப் பற்றுச் சுருங்கிக் குறுகிய நெறியிற் சென்று, அறைகூவிப் போர் புரிதற்கு மாத்திரம் தற்போது துணையாகிறது. மொழிப்பற்று அரசியல் எல்லைகளைக் கடந்து இலக்கிய நலன் என்றபரந்த நோக்கோடு இணைந்தாற்றான் பயிற்சிப்பண்பு வளரும்.

அறிவியல் முன்னேற்றத்தின் பயனாய் இன்று உலகமே ஒரு சிறிய குடும்பமாகி வருகின்றது. தமிழினம் இன்னும் கிணற்றுத் தவளைகளாய் குறுகிய நோக்குடன் இனி மேலும் வாழமுடியாது. தமிழ் இலக்கியக் கண்கொண்டு எமது ஈடு இணையற்ற இலக்கியச் செல்வங்களைப் பரந்த மனப்பான்மையுடன் நோக்கினாற் தான் மறுமலர்ச்சி பெறலாம்; 'நாம் தமிழர்' என்ற இறுமாப்பு எமது நெஞ்சில் இடம் பெறும். கவிக்குயில் பாரதியின் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு' என்ற தாரக மந்திரத்தின் தேவையை உணர்ந்து செயற்படுவோமாக.

<u>கம்பன் கண்ட கனவு</u>

கவிச்சக்கரவர்த்தி என்ற அழியா மகுடத்தைப் பெற்ற கம்பர் தமிழ் மக்களுக்குத் தந்தருளிய கருவூலம் இராமாயணம் ஆகும். இந்தக் காவியம் தன்னைக் கற்போர்க்கு இராம கதையை அறிவிப்பதுடன், வாழ்க்கையைச் செப்பஞ்செய்து கொள்ளுதற்குரிய பல்வேறு நீதி நெறிகளையும் அறிவுறுத்துகின்றது. தமிழரின் நாகரீகம், பழக்கவழக்கங்கள் இலக்கிய மரபுகள், ஒழுக்கமுறைகள் இவைகளைத் தழுவியே கதைப்போக்கும் கவிப்போக்கும் அமைந்திருக்கின்றன. கம்பர் என்ற பெயரை நினைத்த மாத்திரம் ஒவ்வொரு தமிழ் இலக்கிய ரசிகன் கண்முன்பும், தமிழ்க் கவிதா மண்டலத்தின் சிகரமும், தமிழகத்தின் கலைவாழ்வின் வளமும் சுவையும் ஒரு சித்திரத்தில் தோன்றுவ போற் தென்படும்.

பிளேட்டோ என்ற யவனப் பேரறிஞர் 'ரிப்பப்ளிக்' அல்லது 'குடியரசு' என்று தாம் கண்ட கனவை நூலாக எழுதியுள்ளார். இந்நாளிலும் ஹெச்.ஜி வெல்ஸ் போன்றவர்கள் உலகின் எதிர் காலத்தைப் பற்றிக் கனவு கண்டனர். சோழப் பேரரசர் காலத்தில் தமிழுலகம் பெற்ற புத்துயிர்ப்பினைக் கம்பன் கண்ட கனவாய் ராமாயணத்திற் காண்கிறோம். கீழ்நிலையடைந்த தமிழகத்தின் குறையெல்லாம் இல்லாததொரு நாட்டினைத் திருநாடாகப் புனைந்துரைக்கிறான் கம்பன்:

பொற்பில் நின்றன பொலிவு ; பொய்யிலா
நிற்பில் நின்றன நீதி ; மாதரார்
அற்பில் நின்றன அறங்கள் ; அன்னையார்
கற்பில் நின்றன கால மாரியே.

பொதுவுடமை பேசுகின்றது இந்நாளைய உலகம். நாட்டின் செல்வத்தைப் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் முறை நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' என்று இராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருவள்ளுவர் கூறினர்; இதே கருத்தை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கம்பரும் கனவாகக் கண்ட திறம் வியப்புக்குரியது: —

கள்வாரிலாமைப் பொருட்காவலும் இல்லை யாதும்
கொள்வாரிலாமைக் கொடுப்பார்களும் இல்லை மாதோ

என்றும்,

எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ

என்றும் கனவு கண்டார் கவிச்சக்கரவர்த்தி. அரசியற் துறையிலே கம்பன் கண்ட கனவு பிரமிக்கத்தக்கது.. மன்னனை உடலாக்கி, மக்களை உயிராக்குகின்றான். உடல் போக ஆலயம்; இன்பம் நுகரிடம்; இன்பங்களை நுகரச்செய்து உடன்உழலுகின்றவனே அரசன். முடியரசும் குடியரசாக விளங்கும் நிலை இது.

அயோத்தி நகரில் அரச நீதி கூறவந்த கம்பன் "தம்முயிர்க்குறுதியென்னானுர் தலைமகன் வெகுண்ட போதும்" என்று கூறுவதும் ; ராவணனுக்கு அழிவு காலம் கிட்டியதற்குக் காரணமாக "ஆன்ற ஏதுவோடு இடிக்கின்றார் இல்லை..... உன்னை முடிக்கின்றார்" என்று சீதை மூலம் கூறிய அறிவுரை இருபதாம் நூற்றாண்டு அரசியலாளருக்கும் அளித்த வரப்பிரசாதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்பனது கற்பனைச் சொல் ஓவியங்கள்

சொல்லழகோடு கூடிய பொருளழகு தான் உண்மையில் இன்புறத்தக்கது என்பதை விருத்த மெனும் ஒண்பாவில் உயர் கம்பனே தமிழ் இலக்கியப் பூங்காவில் பெருமிதமாய்த் தலை நிமிர்ந்து மலரச் செய்தவர்.

இராவணன் முதற் போரிலே தோற்று நிராயுதராய் மனம் நொந்து நாணித் தலைகுனிந்து இலங்கைக்குத் திரும்புகின்ற கட்டம். கடன்கொண்டார் நெஞ்சம் போலக் கலங்கி நிற்கிறான் இலங்கை வேந்தன். தோல்வியையே அறியாத வீரன் மனநிலையைப் படம் பிடித்துக் காட்டும் கவிஞனுடைய திறனை என்னென்பது! இன்று போய் நாளை வா என்று போகும்போது உலகத்தார் சிரிப்பார்களே, பகைவர்கள் சிரிப்பார்களே என்ற கவலைக்கும் மேலாக ஒரு எண்ணம் அவனை வாட்டி வதைத்தது. சீதை சிரிப்பாளே என்ற நினைவு வரும்போது அவன் மனம் வெட்கத்தால் துடிக்கிறது.

'வான் நகும் மண்ணுமெல்லாம் நகும்' நெடுவயிரத்தோளால் 'நான் நகுள பகைஞர் எல்லாம் நகுவர் என்று! அதற்கு நாறன் வேல் நகு நெடுங்கண் செல்வாய் மெல்லியல் மிதிலை வந்த சானகி நகுவள்' என்றே நாணத்தால் சாம்புகின்றான்.

அனுமான் கடல்கடந்து சென்று இலங்கையிலே சீதையைக் கண்ட காட்சியைக், "காண நோற்றிலன் அவன் கமலக்கண்களால்" என்ற கட்டம் நெஞ்சை உருக்கும் திறம் வாய்ந்தது. கண்ட காட்சியைச் சொல்லும் பாடல் ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கத்துக்கிணையான கம்பீரமான செய்யுள்.

விற்பெரும் தடந்தோள் வீர வீங்கு நீர் இலங்கை வேந்தின் நற்பெரும் தவத்தளாய நங்கையைக் கண்டேன் அல்லேன் இற்பிறப்பென்பது ஒன்றும் இரும்பொறை என்பதொன்றும் கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக் கண்டேன்.

## காதலைப் படம் பிடித்த கம்பன்

அரணிய காண்டம் தான் ராமாயணத்தின் மத்தியபாகம். உடன் பிறந்தே கொல்லும் வியாதி. சூர்ப்பனகை மூக்கு அறுபட்டு "சீதையை அபகரித்துவா" என்று 'அண்ணாவோ! அண்ணாவோ!' என்று அழுது ராவணனை வேண்டுகிறாள். சீதையை நினைந்து 'காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலர வேண்டிய காதல்' நோய் உடனே முளைத்துச் செடியாகி, மரமாகி வளர்ந்து ராவணனை கலங்க வைக்கிறது.

கரனையும் மறந்தான்...... உற்ற பழியையும் மறந்தான்
அரனையும் கொண்ட காமன் அம்பிறல் முன்னைப்பெற்ற
வரனையும் மறந்தான், கேட்ட மங்கையை மறந்திலாதான்.

சீதையின் நினைவொன்றே நிலைத்து நின்றதைக் கவி படம் பிடித்ததிறன் வியப்புக்குரியது. மேலும் இராவணன் காதல் நோய்க்கு காதலி வாய் திறந்து தன் சம்மதத்தைச் சிறிதாவது தெரிவிப்பதைத் தவிர வேறு மருந்தாவது, மந்திரமாவது இல்லை என்று கம்பன் கூறுவதை இருபதாம் நூற்றாண்டில் கூட யாரும் மறுப்பார்களா?

மந்திரம் இல்லை, வேறோர்
மருந்(து) இல்லை மையல் நோய்க்குச்
சுந்தரக் குமுதச் செவ்வாய்
அமுது அலால் அமுதச் சொல்லீர்

## செஞ்சோற்றுக் கடன் சொல்லும் கடமை உணர்ச்சி

விபீடணன் வந்து கும்பகர்ணனை ராமனிடம் சரண்புகச் சொல்லிக் கேட்கிறான். இதை மறுத்துத் தமையனைக் கைவிட மாட்டேன் என்றும், தான் செய்யவேண்டியது "செஞ்சோற்றுக்கடன்" என்றும், ராவணன் பொருட்டு உயிரையும் கொடுப்பேன் என்றும் கூறியது உலகம் உள்ளவரை சகோதர பாசத்தின் உணர்ச்சியை எடுத்துக்காட்டும் சொற்கள்: —

"நீர்க் கோல வாழ்வை நச்சி நெடிது நாள் வளர்த்து
போர்க்கோலம் செய்து விட்டார்க்கு உயிர்கொடாது அங்குப்போகேன்."

என்ற கும்பகர்ணன் போரில் வீழ்ந்தான். ராவணன் "வந்தேன் நொடர மதக்களிறே வந்தேறல்" என்று கதறிக் கொண்டு போருக்குச் செல்கிறான். கடமையுணர்ச்சி இத்தோடு நிற்கவில்லை. தமையனைக் கண்டிக்கவும் செய்தது! 'பேசுவது மானம்' இடைபேறுவது காமம் கூசுவது மானுடரை; நன்றுழ நம கொற்றம்! முவுலகையும் வென்ற ராவணனைக் கண்டும் அஞ்சாது இவ்வாறு கும்பகர்ணன் பேசும் போது நமக்கு மெய் சிலிர்க்கிறது.

கிரேக்க மக்கள் ஜோமரைப் புகழ்வது போல, ஆங்கிலேயர் சேக்ஸ்பியரைப் போற்றுவது போல நாமும் கம்பரைப் போற்றி ராமாயணத்திற் காணப்படும் செந்தமிழ்ச் சிறப்பியல் புகளை நுகர்ந்து அனுபவிப்போமாக. சமய அடிப்படையில் எழும் உணர்ச்சிகளாலும், ஆரிய திராவிடப் பிரிவினை வாதங்களாலும் மொழி வெறி வளருமே தவிர தமிழர் ஒற்றுமை வளராது; தமிழ் மொழியும் வளம்பெற முடியாது. உலகெலாம் வாழும் தமிழர் தமிழுணர்ச்சிபெற்று ஒன்றுபட வேண்டுமொனால் அது இலக்கிய ஒருமைப்பாட்டு நோக்காலும் தமிழ் மொழி வளர்ச்சியாலும் தான் முடியும்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Final Exams**

ROYAL COLLEGE OF PHYSICIANS OF UNITED KINGDOM.MEMBERSHIP. JULY 1975.

BAZA Lokesh Kumar (MB Mysore), BHAVANI SANKARAM Vadali(MB Andhra), DEVADAS Kunjupanicker(MB Kerala), JANAKA RAJ Mysore Narasimha Setty(MB Bangalore ). KUMARASINGHAM,Balakrishnan Sampanthanathan(MB Ceylon),NAGALINGAM Iyngkaran (MB Malaya), RAGHUPRASAD, Puthalath Koroth(MB Kerala),SUBRAMANIAN Sundaram (MB Madras), THANAKRISHNAN Govindasamy (MB Madras),THURAISINGHAM,Vasantharaja (MB Ceylon), VINAYAKAMOORTHY Chelliah(MB Ceylon)

ROYAL COLLEGE OF PHYSICIANS OF LONDON & ROYAL COLL.OF SURGEONS OF ENGLAND

DIPLOMA IN ANAESTHETICS: DEVANANDAN,Sarojini Priscilla(MBBS Madras),JOSEPH, George(MBBS Kerala), MANORAMA Kalli(MBBS Bangalore),MENON Raji Jayaram(MBBS Madras),NAIR Sulochana Kunhikrishnan(MBBS Karnatak),PRABHAVATHI Mannikoth Chavidichi(MBBS Kerala),SELVADURAI Mary,Ananthavathy(MBBS Madras), SOMASEKHAR Pallegar(MBBS Mysore),SUNTHARALINGAM Subramaniam(MBBS Ceylon),VENKATARAMAN Pattabiraman(MBBS Madras),
DIPLOMA IN PSYCHOLOGICAL MEDICINE: KUTTAPPA Winnie(MBBS Bangalore), MUTTULINGASWAMY JayaDevi (MBBS Ceylon).
DIPLOMA IN LARYNCOLOGY & OTOLOGY SUBRAMANIAM Somasundram(MBBS Singapore) VENKATESAN Varagur Mohan (MBBS,Bangalore)

THE INSTITUTE OF BANKERS U.K. ASSOCIATESHIP APRIL 1975.

N NALLATHAMBY(Bank Negara Malaysia), S V RAMACHANDRAN(Bank of Baroda), L K BHARATHI(Indian Overseas Bank),R SURYANARAYAN(State Bank of India).

THE CHARTERED INSURANCE INSTITUTE.U.K. APRIL 1975


FELLOWSHIP KANDASAMY Mari(Insurance Crp of Ceylon THANGAKONE Joseph Isaac(Ins.Corp of Ceylon), V C MURALIDHARAN(Untd India Fire & General)
ASSOCIATESHIP THANGAKONE Jeyarani(Ins.Corp of Ceylon), LOURDES,Santhanam, Christie (Social Security Organisation).

MANCHESTER UNIVERSITY OF SCIENCE & TECHNOLOGY

B Sc Physics & Mathematics. 2nd Class Miss N KARUNANANTHAN.

A P P O I N T M E N T S

MR S SOMANATHAN of Hounslow,Middlesex has been appointed as Principal Assistant Quantity Surveyor for the London Borough of Hammersmith.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TAMIL FILM & SOCIAL CLUB

43 YORK ROAD, BATTERSEA, LONDON S.W.11

அளிக்கும்

திரை யோவியம்



| | |
|---|---|
| முத்துராமன் | கே. ஆர். விஜயா |
| சிவகுமார் | பிரமிளா |
| T. K. பகவதி | S. N. பார்வதி |
| V. K. ராமசாமி | செல்வி |
| சுருளிராஜன் | உதயலட்சுமி |
| ஐ. எஸ், ஆர். | உமா |
| பக்கிரிசாமி | லதா |
| ஜெயசந்திரன் | பேபி சுமதி |

நடித்த

# சொந்தம்



திரைக்கதை-டைரக்ஷன்:

A.C. திருலோகசந்தர் M.A.

---

AT THE COMMONWEALTH INSTITUTE, HIGH STREET KENSINGTON, LONDON W 8.

---

| FIRST SHOW ON FRIDAY | SECOND SHOW ON SATURDAY |
|---|---|
| 19th SEPT AT 7.30 PM | 4th OCTOBER AT 6.30 PM |

---

ADMISSION: ADULTS: £1-00; CHILDREN: 50p

BOOKINGS: 01 - 228 8751; 01 - 228 1626

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEWSGRAM

## JAFFNA MAYOR ALFRED DURAIYAPPAH MURDERED !

Mr Alfred Duraiyappah, Mayor of Jaffna, Ceylon and leader of the S.L.F.P Branch in Jaffna was murdered on July 27th being shot by three masked gunmen when he was on his usual trip to a temple in Punnalai, Vaddukoddai. Muncipal Councillor Mr Rajaratnam and one Mr Loganathan who accompanied him were shot at and injured. Tamil Youth leaders and Tamil United Front Joint Secretary Kasi Anandan have been taken into custody. The Municipal Council has been dissolved. Late Mr Duraiyappah entered politics at a very early age. He was elected Mayor of Jaffna when he was 32. He defeated Mr G G Ponnambalam and became an M.P in 1960.

## "INDIA HAS BEEN SAVED" SAYS GEORGE BILAINKIN

Mrs Gandhi knew a Vietnam was being planned. Should she have sat silent and said "This is the will of God" - India must return to the days of of My lai massacres, Amritsar and Guernica,inter-communal strife and murder to please the merchants of arms in a distant land? wrote Mr George Bilainkin, former literary editor of London's Daily Mail in his letter to London's India Weekly. He continues " I congratulate your Prime Ministeron recognising the realities of the American and Nato plan to lead this martyr of civilisation in another Vietnam? The girl who scarcely even saw her father and mother in her early days (for both were kept behind bars by the occupying power)showed superb resolve that she would not lightly allow India to endure a blood bath to please foreign agencies. India has been saved by her skill and by her advisers.India has been the target of American plots for "Tension Expansion".'Fight for her' he says "remember she is the daughter of Jawaharlal Nehru and a pupil of Gandhi. She does not and did not seek her superhuman task. India has a serious role to play in the sick,sorrowing,suicidal and desperate world."

## TAMIL ECONOMIC MOVEMENT IN CEYLON

The Tamil Economic Movement in Ceylon has prepared a plan to give training to fifty Tamil youths every year in Agriculture. This training will take place at the Trincomalee Agricultural Training Institute.Once this training is over these youth will be helped to settle themselves individually or on a corporate basis in the Northern and Eastern provinces.There is also another scheme to train youth in cottage and small industries. A seminar is being held in this connection. Dr J R Wilson is the President of this movement and Mr A Kumarakuru is the Secretaty.The movement is a non-political organisation.

In the United Kingdom the VALAR EELAM TRUST has decided to implement the above policy by raising funds from Tamils resident in the U.K. and contributing towards the establishment of a model farm in Kilinochi as a first step. Tamils in the U.K. wishing to participate in this project are requested to contact the Secretary to the VALAR EELAM TRUST, Dr R THAYAPARAN, 28, Viking Way, Wickford, Essex. (Tel: 03744 61581)

**Please Patronise the Advertisers**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEWS IN BRIEF

*** Police have arrested a person in connection with the assassination of India's Railway minister Mr Mishra. The alleged assassin belongs to 'Anand Marg'. Considerable amount of foreign supplied arms have also been uncovered by the Indian Police in the possession of extremist organisations.

*** Dr H W Thambiah, a former Judge of the Supreme Court of Ceylon has been appointed High Commissioner for Ceylon in Canada. The present High Commissioner in Ottawa Mr Vernon L B Mendis has been appointed High Commissioner in the U.K. U.K.'s Mr Tilak Gooneratne leaves London for a post in Brussels.

*** Four Tamil Engineering students from the Katubedde campus of the University of Ceylon have built Ceylon's first Hovercraft.

*** Mr M Sathananthan, a Karate expert from the Academy of Martial Arts became for the second successive year "the Black Belt" Karate champion of Ceylon.

LATE NEWS!

*** N V Natarajan, Tamilnadu's minister for Backward Classes who had been undergoing treatment in Madras General hospital has passed away!

*** Lanka Sama Samaja Party, partner in the United Front government of Ceylon, has officially broke away from the coalition.

FOR KANCHEEPURAM SILK SAREES
COTTON SAREES
SARONGS (LUNGIS)
Please Contact:

SHAH TRADING
95 ST. JOHNS HILL
LONDON S W 11
01-228 8751 ; 228 1626

CARNATIC MUSIC CONCERT
(VIOLIN) By
DR. L. SUBRAMANIAM on VIOLIN
DR. R. EKAMBARAM &
GOPAL RAMANEE on MRIDANGAM

7.00 PM on SATURDAY 13TH SEPTEMBER 1975
INDIAN YMCA, 41 FITZROY SQUARE, LONDON W1.

ADMISSION £1.00 & 75p.

FOR TICKETS CONTACT:
Balu: 1 Western Court, Rosebank Way,
London, W.3. (01-759 5511 ext.5746) Office Hrs.
V.T.S. Moorthy, 58 York Road, New Barnet,
Herts. 01-449 7268 (Ev. and Weekends)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CLASSIFIED ADVERTISEMENTS

**RATES: 25p per line, Average 5 Words. Box No. 5p extra. Minimum 50p. Prepayment essential.**

## Matrimonial

MALAYSIAN CEYLONESE(26)SEEKS BRIDEGROOM UPTO 32 FROM SINGAPORE,MALAYSIA,CEYLON, INDIA.WRITE:MISS RAJAH,BLYTHE HOUSE FRIERN HOSPITAL,LONDON N11.

ENGLISH TEACHER,AGE 28,GOOD LOOKING & FROM RESPECTABLE JAFFNA HINDU VELLALAR FAMILY,SEEKS SUITABLE ALLIANCE FROM A SIMILAR BACKGROUND LIVING ABROAD.BOX75.

## Marriages

SAILENDRA (E S P AMARAL,LONDON)SON OF MR & MRS V LAKSHMIPATHY,LONDON N W 2 TO ANNAPURNAM DAUGHTER OF MR & MRS N.V. RAMAN(INDIAN EMABASSY,KHARTOUM,SUDAN)ON 7.7.75 AT BANGALORE CITY.

RAJESWARAN SATHIANATHAN TO SUNETRA DAUGHTER OF MR & MRS C J T THAMOTHERAM, EALING,LONDON W13.)ON 2.8.75 AT KINGS DOWN METHODIST CHURCH,LONDON W13.

SRINIVASAN(INSURANCE CONSULTANT,ANTHONY MORGAN ASSOCIATES,LONDON SW16)SON OF MR MRS PONNUDURAI, THIRUNELVELY,JAFFNA TO SUGANTHA DAUGHTER OF MR & MRS PONNU-DURAI,KOKUVIL,CEYLON ON 22.8.75.

SIVAGURUNATHAPILLAI(MECHANICAL ENGINEER GEC-ELLIOTT AUTOMATION,LEWISHAM)SON OF MR & MRS KANAPATHIPILLAI,KALVIANKADU, JAFFNA TO GNANAPOOBATHY DAUGHTER OF MR & MRS SELVANAYAGAM,THANANKILAPPU,JAFFNA ON 24.8.75 AT EAST LONDON HINDU CENTRE, STRATFORD,LONDON.WEDDING RITES BY HINDU ASSOCIATION OF GREAT BRITAIN.

SHIBUM,SON OF MRS & LATE MR SOOBIAH, REDUIT,MAUTITIUS TO LEELAVATHY THEATRIC DAUGHTER OF MR & MRS SUBRAYAN,DEMERARA, GUYANA ON 24.8.75 AT HAMPSTEAD TOWN HALL,LONDON.WEDDING RITES BY HINDU ASSOCIATION OF GREAT BRITAIN.

DR SRI VENKATESAN(RESEARCH ASST,UNIVERSITY COLLEGE,CORK,EIRE)SON OF MR & MRS SRINIVASAN,MADRAS 17 TO AMBUJAVALLI DAUGHTER OF MRS & LATE MR VENKATARAMAN, THUVARIMAN,MADURAI ON 25.8.75.

MURUGEASAN(TECHNICAL UNIVERSITY,BERLIN) SON OF MRS & LATE MR SANGU PILLAI,COIMBATORE TO DR MISS SUMATHI ON 11.7.75 AT COIMBATORE.

## Services

AYURVEDA DRUGS FROM CEYLON & INDIA USED FOR TREATMENT. FOR AN EARLY APPOINTMENT WRITE TO DR SIVANANTHAN,AYURVEDIC CLINIC & SURGERY,59 KING EDWARD ROAD,ENFIELD MIDDLESEX (U.K)

## Births

BABY SON TO MR & MRS V PONNIAH, WOKING, SURREY.

BABY SON TO MR & MRS V KATHIR KAMARAJAH,NEW MALDEN,SURREY.

SHEILA BABY DAUGHTER TO MR & MRS RATNA SINGAM,NEW TOWN,WALES

BABY SON TO MR & MRS CHANDRARAJ,SIERRA LEONE,WEST AFRICA.

## Deaths

YOGASUNDRAM - M B YOGASUNDRAM,ATTORNEY-AT-LAW, BELOVED SON OF LATE M BALA SUNDRAM,EX-MP FOR KOPAY AND MRS BALA SUNDRAM OF THIRUNELVELY,JAFFNA, LOVING BROTHER OF GNANASHANMUGAM(MAIDENHEAD,UK) DR BALAKRISHNAN(LONDON), SIVANANTHA SUNDRAM(CANADA),SUNDARI,YOGESWARY, AND BROTHER-IN-LAW OF THILLAINATHAN,ATTORNEY AT LAW AND VIMALA(UK) EXPIRED ON 7.8.75 AT COLOMBO,CEYLON.

## Films

MAGA FILM SOCIETY,LONDON PRESENT K A L Y A N A O O R V A L A M ON 14th SEPT AT 12.15 P.M. AT THE ODEON CINEMA,BROADWAY,WIMBLEDON,LONDON SW19 . TICKETS: £1-25p BOOKINGS: 01-540 7304; 845 1433; 580 8049(OFFICE HRS).

TAMIL FILM & SOCIAL CLUB,LONDON PRESENT S O N T H A M STARRING K R VIJAYA & MUTHURAMAN AT THE COMMONWEALTH INSTITUTE, HIGH STREET KENSINGTON,LONDON
1st SHOW: FRIDAY 19th SEPT AT 7.30 P.M.
2nd SHOW: SATURDAY 4th OCT AT 6.30 P.M.
TICKETS: ADULTS:£1-00;CHILDREN 50p.
BOOKINGS: 01-228 8751; 228 1626.

## Socials

LONDON TAMIL SANGAM PRESENT PERIYAR & ARIGNAR ANNA VIZHA ON SATURDAY,SEPT 20th AT 5.00 P.M. AT THE TRINITY COMMUNITY CENTRE HALL,EAST AVENUE, EAST HAM,LONDON

CARNATIC MUSIC CONCERT
DR L SUBRAMANIAM ON VIOLIN ******** WITH DR R EKAMBARAM & GOPAL RAMANEE-MRIDANGAM ON SATURDAY 13th SEPTEMBER AT 7.00P.M. AT INDIAN Y M C A, 41 FITZROY SQUARE, LONDON W1.TICKETS:V T S MOORTHY 449 7268

LONDON ARANGETRAM - RATHIKA & THENUKA PERINPANAYAGAM ON SATURDAY 20th SEPT AT 6.00P.M. AT THE MARLBOROUGH HALL,COMPTON ROAD,WIMBLEDON,LONDON SW19.

Printed and Published by S. Sabapathipillai, M.A., LL.B.(Lond.), F.R.A.S., F.T.I.I., Bar-at-Law.

for London Murasu Pirasuram, 8 Ashen Grove, London SW19 8BN.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# For Sarees Visit

# SAREE BOUTIQUE

(IMPEX ENTERPRISES)



E 3,4,5 & 6

The Broadway Market
Tooting Broadway
London SW 17
01- 672 6537

308 London Road
West Croydon
Surrey

**LATEST SPECIALITY**

NYLON NYLEX 630, 640, 644, and 680.
SILK SAREES, EMBROIDERY SAREES,
LUREX SAREES, CASHMERE SAREES, KANJIVARAM, HAKOBA, etc., etc.

***WIDE SELECTION OF TAMIL AND HINDI RECORDS — AT VERY COMPETITIVE PRICES!***

***HUGE VARIETY OF INDIAN CHAPPALS IN ALL COLOURS AND DESIGNS.***

---



# TRA ENTERPRISES Limited

ROOM 17, 4th FLOOR, EVELYN HOUSE, 62 OXFORD STREET.
LONDON W1. [TEL: 01 - 636 0473]

FLY WITH THE EXPERIENCED AND DEPENDABLE SPECIALISTS IN UNBEATABLE ECONOMY FARES

TO AND FROM SRI LANKA, SINGAPORE, KUALA LUMPUR, MADRAS, BOMBAY, BANGKOK, AUSTRALIA, U.S.A., CANADA, TOKYO, KARACHI.
ALSO TO MOST DESTINATIONS IN EUROPE.

LET US GIVE YOU A QUOTE BEFORE YOU BOOK.

SPECIAL FLIGHTS AT MUCH REDUCED RATES TO SRI LANKA ON FOUR INTERNATIONAL SCHEDULE AIRLINES.

AVOID DISAPPOINTMENT BY RESERVING YOUR SEATS NOW FOR YOUR SUMMER OR CHRISTMAS HOLIDAY.

TELEPHONE OFFICE HOURS MRS RITA SANDRASAGRA
01 - 636 0473
01 - 637 7371
01 - 637 7372

EVENINGS & WEEKENDS MR K C RAJASINGHAM
AT 01- 942 1694
OR MR D ANDREE
AT 01- 961 0680

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் முரசு LONDON MURASU

யாதும் ஊரே... யாவரும் கேளிர்.


## HANDLOOM HOUSE



INDIAN PURE SILK SAREES & BENARES & ALL OTHER TYPE SAREES FROM INDIA & JAPAN
20% DISCOUNT FROM MARKED PRICE

PRINTED NYLON £2-50 PLAIN NYLON £2-00
PRINTED POLYESTER & WOLLEY GEORGETTE £4-00

**35 RUPERT STREET**
**(off Shaftesbury Avenue)**
**LONDON, W1V 7FS**
**Tel: 01-437 4658**
**Underground: Piccadilly Circus.**

**243 TOTTENHAM COURT ROAD**
**LONDON, W1P 9AD**
**Tel: 01-580 1771**
**Underground: Tottenham Court Road and Goodge Street.**



*R. Pathmanaba Iyer*
*27-B High Street*
*Plaistow*
*London E13 0AD*
*Tel: 020 8472 8323*



**Edition mensuelle internationale en Tamoule** Publiée à Londres

**International Tamil Monthly Magazine** Published from London

In London herausgegebene **internationale tamulische Monatsschrift**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org